வைத்திய சந்திரிகா

July 1925

JL
L:5m211 N25VC
N25.1.2
210145

SUB-COLLECTOR
24 JUL 1930
31 OCT 1930

உ

வைத்தியசந்திரிகா

புத்தகம் 1 குரோதன-௵ ஆடி-மீ பகுதி 2

விஷய சூசிகை.

		பக்கம்.
தேசிகள் quack அல்லது மூடவைத்தியரா.	பத்திராதிபர்	... 1
வைத்திய உலகம் :—	,,	... 9
ஓர் அதிசயம் :—	,,	... 11
நமது வழக்கங்கள் :—	ஸ்ரீ பார்த்தஸாரதி	... 12
ஆகாரம் :—	பத்திராதிபர்	... 14
வைத்திய சாரம் :—	பண்டிட் நாராயண ஐயங்கார்	8

Pandit, S. NARAYANA IYENGAR,
Editor and Publisher.

Vol. 1 **July 1925.** **No. 2**

Printed at the " Vivekabanu Press, " Karur.

௨

சுதேசிகள் quack அல்லது மூடவைத்தியரா.

சாஸ்திர தத்வமுணராது கையிலகப்பட்ட மருந்துகளை வைத்துக்கொண்டு வியாதியின் நிலை, ரோகியின் சரீரக்கூறு இவை பொன்று மறியாது சிகித்சை செய்பவனே quack அல்லது மூட வைத்தியன். பலவிதநோய்கள் பற்பல காரணங்களால் சரீர அமைப்பில் மாறுபாடுகளை யுண்டு பண்ணுகின்றன. அதற்கேற்ப பற்பல ஔஷதங்களும் சொல்லப் பட்டிருக்கின்றன. அவைமுழுமையுமுணர்ந்து அதனுடன் ஔஷதங்களின் செய்பாகத்தையும் அறிந்து கொள்ளவேண்டியது வைத்தியன் கடமை. பிறகு தகுந்த ஒருவரிடம் சிலகாலம் அனுபவம்பெறீ வேண்டியதும் அவசியமாகின்றது. ஆகவே மூன்றுவிஷயங்களில் தேர்ச்சி பெறுதல் வைத்தியன் ஒவ்வொருவருக்கும் முக்கியம். (1.) சாஸ்திரத்தேர்ச்சி (2.) செய்பாகத் தேர்ச்சி (3.) அனுபவதேர்ச்சி என இம்மூன்றும் எல்லாமுறைகளுக்கும் பொதுவானது. ஆகவே இவை சுதேசிவைத்தியர்களுக்குத் தான் வேண்டுமென்றும் மற்றும் ஆங்கிலமுறை முதலியவைகளுக்கு அவசியமல்லவென்றும் சொல்லமுடியாது. தேவ வைத்தியர்களான அசுவினீ தேவதைகள் கூட இம் மூன்றையும் தக்ஷர் என்பவரிடத்தில் பெற்றதாக கூறப்படுகின்றது. ஆலோசிக்குங்கால் இம்மூன்றும் சுதேசவைத்தியர்களுக்கே பொருத்த முள்ள தெனக்கூறுவோம். " தீர்த்தாத்த சாஸ்த்ரார்த்தோ திருஷ்டகர்மா " என்று இம்மூன்றும் வேண்டியது அவசியமென வாக்படர் கூறுகின்றார். ஆகையால் அறியாப்போலிகளை நமது சாஸ்திரமும் வெறுக்கின்றது. ஆனால் சுதேச வைத்தியர்கள் எல்லாரும் முன்சொன்ன மூன்றுவிஷயங்களுமுணர்ந்தவரெனநாம் கூறவில்லை. ஏதோ சிலர் சாஸ்திரமுணராது சிலமருந்துகளை மாத்திரம் வைத்துக்கொண்டு சிகிச்சை செய்வது உண்மையே. இதைக்கொண்டு ஒருமுறையையே குறைகூறுவது நியாயமல்லவென ஆக்ஷேபிக்கின்றோம். தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் அஸிஸ்டெண்டு சர்ஜன் வேலைபார்த்து வரும் ஸ்ரீமான் B. V. வரதாசாரியார் அவர்கள் ஸ்ரீமான் வைத்திய சடையன் என்பவர் மேல் நடக்கும் ஒருகிரிமினல் கேசில் (ஷை விவரம் வைத்திய உலகம் என்ற தலையங்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றது.) பிராசிகூஷன்

பக்கல் சாக்ஷியம் கொடுக்கும்பொழுது "ஆயூர்வேதவைத்தியர்கள் (quack) மூடவைத்தியர்கள்" என்று சொன்னார். இப்படிசிலர் கூறுவதற்கு வழிகள்இரண்டு உண்டு. முதலாவது ஆயுர்வேதம் அல்லது மற்ற சுதேச வைத்யநூல்களைப் பூர்ணமாகப் படித்துப்பார்த்து அதிலுள்ள குற்றங்களை அறிந்து கொள்வது. இரண்டாவது ஷெடி முறைகளில் பயின்ற வைத்தியர்களுடன் பழகுவது. இவ்விரண்டு வழிகளில் எதைப்பின்பற்றி இவர் இவ்வித அபிப்பிராயம் கொண்டனரென்பது நமக்கு விளங்கவில்லை. சுச்ருதர் சிகிச்சையில் கட்டி-புண்முதலியவைகளுக்கு பரிகாரம் சொல்லுமிடத்தில் சொல்லுவதாவது, "கட்டிபுண் முதலியவைகளுக்கு சிகிச்சை அறுபது பகுதிகளாக பிரிக்கலாம். கட்டி முதலியவைகள் சரீரத்தில் நன்றாக வெளிப்படுவதற்குமுன் ஆரம்பத்தில் சற்று தடிப்பு காணும்பொழுதே அதை வைத்தியன் நிதானித்து உடனே அது பெருக்காமல் நிவர்த்திக்கவழிதேடவேணும். அவைபனிரெண்டுவகை. பிறகு கட்டிகளாக அல்லது புண்களாக உருவம் காட்டும்பொழுது செய்யவேண்டிய சிகித்சை ஒன்பது. இவற்றுள் ஆயுதத்தால்செய்யும் சிகிச்சைஎட்டு. ஆயுதத்தின் பிரயோகத்தை தாங்கமுடியாதவர்களுக்கு அதற்கு பதிலாக மூலிகைகளை யுபயோகித்து கட்டிகளை யுடைப்பது ஒன்று. கட்டிகள் உடைந்த பிறகு புண் சுத்தமாவதற்கும். ஆறிவருவதற்குமாகபிரதான வழிகள் ஏழு. மற்றும் வழிகள் முப்பத்திரண்டு ஆக அறுபது. கட்டி முதலியவைகளைக் கீறிவிடும் சஸ்திரங்கள் அல்லது ஆயுதங்கள் இருபது வகை. கீறிவிட்ட புண்களில் இருக்கும் மூளை முதலியவைகளை எடுப்பதற்காக உபயோகிக்கும் கருவிகளுக்கு யந்திரம் எனப்பெயர். இந்த இயந்திரங்கள் 101-வகை. கட்டிகளை கீறிவிடும் பொழுது கட்டியிருக்கும்இடத்திற்கும் கட்டியின்உருவத்திற்கும் ஏற்றவிதமாக இருபது வகை ஆயுதங்களுள் அந்தந்த ஆயுதங்களை உபயோகிக்கவேண்டும். கீறிவிட்ட பிறகு புண்களைகட்ட ஏற்றசாமான்கள் பதினைந்து. புண்களை கட்டு விதம் பதினாறு" அதோடு ஒவ்வொரு வகையிலும் விஸ்தாரமாக உபயோகத்தைக் சொல்லியிருக்கின்றனர். ஆகையால் நமது டாக்டவர்கள் சுதேசவைத்ய சாஸ்திரங்களைப்படித்துப்பார்த்து தோஷம்கூறியதாக நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. உண்மையில் படித்துப் பார்த்திருந்தால் இவ்விதம் அவர் கூறியிருக்க முடியாதென்றே சொல்லுவோம். இனி இரண்டாவது வழியை யோசிப்போம், பழக்கத்தால் ஒருமுறையில் குணதோஷம் கூறுங்கால் அப்பழக்கம் விசேஷமாக விருக்கவேண்டும். தொன்றுதொட்டுவந்த சுவல்ப பரிசயத்தைக்கொண்டு வைத்யம்செய்யும் சில சுதேசிகளிடம்பழக்கத்தைக்கொண்டு ஒருசாஸ்திரயோக்கியதையை

210145

நிர்ணயிப்பது நியாயமல்ல. சாஸ்திரகியானமும் பூர்ணமாகப் பெற்று அனுபவம் முதிர்ந்த பெரியோர்களிடம் பழகி குணதோஷங்களை விவரிப்பது அறிஞர்செயல். காலஞ்சென்ற பண்டிட் கோபாலாசார்லு போன்ற பெரியோர்களிடம் பழகி குணதோஷம் கூறப்புகின் ஒருவாறு நாம் அதை ஏற்றுக் கொள்ளக்கூடும். ஜில்லா சர்ஜன் போன்ற பெரியவைத்தியர்கள் அசாத்யமென்று கைவிட்ட பல சஸ்திர சிகித்சையை நமதுநாட்டுவைத்தியர்கள்ஏற்று குணப்படுத்துவதை இன்றும் பார்க்கலாம். ஆங்கிலமுறையில் தற்காலம் உபயோகப்படும் சஸ்திரங்கள் பெரும்பாலும் நமது கிரந்தங்களிலிருந்தே எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. உதாரணமாக.

நகசஸ்திரம் = Nail pairer	அஞ்சிதாக்ரம் = Abcess-knife.
அர்த்ததாரம் = Paget's knife.	ப்ரயதாக்ரம் = Scalpel.
குடாரிகா = Axe-shaped.	கரபத்ரம் = Saw.
வ்ரீஹிமுகம் = Teocar.	மண்டலாக்ரம் = Spoon.

இவை முதலியவைகள் நமது சாஸ்திரங்களில் விஸ்தாரமாக வர்ணிக்கப் பட்டிருக்கின்றன. நமது ஆயுதங்களுக்கு வேறு பெயர் கொடுத்து ஆங்கிலர்கள் உபயோகிக்கின்றனர். இவ்வாயுதங்கள் ஒவ்வொன்றுக்கும் உருவம் முதலியவைகளும், இடங்களுக்குத்தக்க விதமாக உபயோகம் முதலியவைகளும் நமது சாஸ்திரங்களில் கூறப்படுகின்றன. தவிர Physiology என்ற சாரீரபாகம் தங்கள் முறைக்கே ஏற்பட்டதென்றும் இது சுதேசவைத்திய கிரந்தங்களில் கிடையாதென்றும் ஆகவே சஸ்திர சிகித்சைக்கு சுதேசவைத்தியர்கள் அருகரல்லவென்றும் சிலபித்தர் நினைக்கின்றனர். ஆங்கில சாரீர பாகத்தில் நமது சுதேச நூல்களிலிருந்தே பல பதங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. உதாரணமாக

ஹிருத் = ஹார்ட் (Heart)	ப்லீஹா = ஸ்பிலீன் (Spleen)
பரிஹிருதயம் = பெரிகார்டியம் (Pericardium)	க்லோம = லங்க் (Lung)
	கண்ட = க்லாண்ட் (Gland)
பரியஸ்திகம் = பெரிஆஸ்தியம் (Peri-osteum)	ஸ்வேத = ஸ்வெட் (Sweat)
	கர்மஜநிதா = தெர்மோஜெநிஸிஸ் (Thermogenisis)
கர்மமாத்ரு = தெர்மாமீடர் (Thermometer)	

இவைபோன்ற பல சுதேசவைத்ய பதங்கள் பல நூற்றாண்டுகளாக ஆங்கிலத்தில் உருமாறி காணப்படுகின்றன. இன்றும் பல சுதேசவைத்யர்கள் நம் சுதேச ஆயுதங்களைக்கொண்டு ஆங்கில

சம்பந்தமில்லாமலே சஸ்திர சிகித்சை நன்கு நடத்தி சித்திபெறுவதையும் காண்கின்றோம். இவ்விதம் சிகித்சை செய்யும் காலத்தில் சில சமயங்களில் தவறு இழைப்பதும் சகஜமே. ஆங்கிலமுறைப்படி சிகித்சை செய்யும் காலங்களிலும் தவறுதல் நேருவது இயல்பே. ஆகையால் குறிப்பிட்ட சிலர் இழைக்கும் தவறுதல்களைக் கொண்டு ஒருமுறையை தூஷிப்பதாயின் அது எல்லா முறைகளுக்கும் பொருந்தும். நமது டாக்டர்மாத்திரமின்றி வேறு சிலரும் அர்த்தமின்றி இவ்விதமே குறைகூறதலைப்பட்டு விட்டனர். சென்னை ஹைகோர்ட்டில் பொருப்பு வாய்ந்த பெரியபதவிவகிக்கும் ஒருவர் சிலகாலங்களுக்கு முந்தி ஒருசங்கத்தில் பேசும்போது சொன்ன சில வார்த்தைகளின் சாரத்தை இங்கு குறிப்பிடுவோம். "வைத்தியர்களென பெயர்கொண்டுதிரியும் இப்போலி சுதேச வைத்தியர்களின் யோக்கியதை நியாயஸ்தலங்களில் பிரேதத்தின் மரணவிசாரணைகாலங்களில் புலப்படும்".

அதாவது துர்மரணமான மனிதனின் மரண சோதனை நடத்த சுதேச வைத்தியர்களுக்குத் தெறியாதென்றும், அவ்விஷயமாக நியாயஸ்தலங்களில் முடிவானசாக்ஷியம்கொடுக்க அவர்களுக்கு சக்தி கிடையாதென்பதும் அன்னார்கருத்து. ஐயோ பாபம்! சுதேசவைத்தியமுறை முக்கியமாக மனிதன் ஆரோக்யத்தைக் கருதியே பெரியோர்களால் ஏற்படுத்தப் பட்டதென்பதை அவர் அறியாமல் கூறிவிட்டனர். முக்திக்கும், ஆரோக்யத்திற்கும் இன்றியமையாத சாதனங்களில் முக்கியமானதாக ஒருகாலத்தில் கருதப்பட்ட வைத்திய முறை தற்கால நாகரீகத்தில் வேறு விதமாக நினைக்கப்படுகின்றது. பற்பல காரணங்களால் சில சுதேசவைத்தியர்கள் சஸ்திர சிகிச்சையை கையாட தற்காலம் சக்தியற்றவர்களாகவிருப்பினுக தகுந்த அனுபவமும் கியானமும் படைத்த சுதேசவைத்திய அறிவாளிகள் ஒருக்காலும் ஆங்கில வைத்தியர்களுக்கு பின்னணியில் நிற்கமாட்டார்களென்பது திண்ணம்.

நிதானம்.

வியாதிகளின் விரிவைச்சொல்லும் வைத்திய பாகத்திற்கு நிதான மெனப்பெயர், நமது சந்திரிகையில் வைத்திய சாரம் எனதனித்தலைப்பின் கீழ் தொடர்ந்து இவ்விஷயம் வருவதை கவனிக்கலாம். ஆங்கிலத்தில் ஒவ்வொரு வியாதிக்கும் தனித்தனி காரணங்கள் கூறப்படுகின்றன. பெரும்பாலும் வியாதிகள், அவைகளுக்குற்ற சிலபுழுக்கள் சரீரத்தில் கலந்து உண்டாக்கும் விஷங்க

ளால் உண்டாகின்றன என்பது அவர்களின் கொள்கை. சுதேச வைத்ய நூல்களும் இந்தபாகத்தை ஒப்புக்கொள்கின்றன. ஆனால் அவைகள் நேர்முகமாக சரீரத்தில் வியாதியை யுண்டுபண்ணுவதில்லை யென்றும், சரீரத்தில் எங்கும் வியாபித்திருக்கும் திரிதோஷங்களையே முதலில் தாக்குகின்றனவென்றும், அதனால் நிலைகுலைந்த திரிதோஷங்களே வியாதிக்கு காரணங்களென்றும் கூறுகின்றன. ஆங்கிலத்திலும் இப்பூச்சிகளின் விஷம் ரத்தத்தில் கலந்து பிறகு வியாதி யுண்டாகின்றதென்று நினைக்கின்றனர். உட்கொள்ளும் ஆகாரத்தாலும், பூச்சி, புழு, காற்று, வெய்யில், ஜலம் முதலியவைகளாலும் வியாதியுண்டாகின்றன. ஆகவே உள்காரணம், வெளிகாரணமென இருவகை காரணங்களால் வியாதியுண்டாகலாம். எந்தகாரணங்களால் வியாதி வரினும் முதலில் திரிதோஷநிலைகெட்டே வருகின்றது. தனக்கு விருத்தமான ஆகாரத்தை ஒருவன் உட்கொள்ளுவதால் சரீரத்தில் தோஷநிலை மாறுகின்றது. அம்மாறுபாட்டிற்குத் தக்கவாறு வியாதியு முண்டாகின்றது. அவ்விதமே வெளிக்காரணங்களாலும் முதலில் சரீரத்தில் தோஷநிலை மாறுகின்றது. பிறகே வியாதிக்குறிகள் தோன்றுகின்றன. ஆகவே எல்லாவியாதிகளும் திரிதோஷங்களால் உண்டாகின்றன வென்று சுதேசவைத்தியசாஸ்திரம் கூறுகின்றது. "ஸர்வே ஸஞ்சாரிண" என்று எல்லாவியாதிகளையும் ஒட்டுவாரை ஒட்டியாகவே நினைக்கின்றனர். பூச்சி புழுக்களால் உண்டாகும் வியாதிகள்தான் ஒட்டுவாரை யொட்டியாக ஆகக்கூடும். ஆனதால் உலகினில் சர்வ வியாதிகளும் பூச்சி புழுக்களாலேயே உண்டாகின்றனவென்று சுதேசவைத்திய நூல்கள் அபிப்பிராயப்படுகின்றன. ஆனால் அப்பூச்சி புழுக்களின் சுரூபம் முதலியவற்றை ஆங்கிலநூல் விவரிப்பது போல சுதேசநூல்கள் விவரிக்கவில்லை. இவற்றை விவரிப்பதால் நூல் பெருகுமேயன்றி சிகிச்சையில் யாதொரு பயனும் கிடையாது. உதாரணமாக ப்ளேக் என்கிற அக்ரி ரோகிஹிணி வியாதியை எடுத்துக் கொள்ளுவோம். இந்நோய்கண்டவருக்கு ஔஷதம் கொடுப்பது முக்கியமே யன்றி அப்புழுக்களில் விஸ்தாரமான கியானம் முக்கியமல்ல. அவற்றை விவரிப்பதைவிட ஆங்கில நூல்கள் "ஹைமாதி பாணகம்" போன்ற சிலமருந்துகளை விவரித்திருப்பின் உலகிற்கு மிகவும் உபகாரமாயிருக்கும். ஆகையால் இவற்றைப்பற்றி ஆங்கில நூல்கள் போல் சுதேச வைத்தியநூல்கள் கவனம்செலுத்தவில்லை. தவிர ஆதிகாலத்தில் இப்பொழுதுபோல புஸ்தகப்பதிப்பு முதலிய சௌகரிய மில்லாததாலும் ஒவ்வொரு விஷயங்களையும் சுருக்கமாகச்சொல்லுவதே பெரியோர்களின் சுபாவமானதாலும், அனுபிய

மான விஷயங்களைக்குறைத்தும் அவசியமான சிகித்சா முறைகளை விரித்தும் நமது நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. பயிலுங்கால் சீடனுக்கு அவ் விஷயங்களை விரிவாகச் சொல்லுவது குருவின் கடமை. இத்திரிதோஷங்களை அறியக்கூடாத சாமான்ய ஜனங்களுக்கும் உதவும்படி வியாதி மாத்திரம்தெரிந்து சிகிச்சை செய்யவேண்டிய வசதிகளும் சுதேசவைத்திய நூல்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் முத்தோஷமறிந்தவர்களும் அஃதறியாதவர்களும் சமமாக உபயோகிக்கும்படி தேசியநூல்கள் முக்கிய சாதனமாகவிருக்கின்றன. வியாதி எக்காரணங்களால் வரினும் வாத பித்த சிலேஷ்மங்களின் சமநிலையை பாதித்தேவருகின்றது. ஒன்றாலும்பாதிக்கப்பட்டிராத சமநிலை ஆரோக்கியமெனச்சொல்லப்படுகின்றது. சமநிலை பாதிக்கப்படின் அதுவே வியாதியாகும். சமநிலை பாதிக்கப்படுவதற்கு காரணம் இருவகையாகின்றது. முதல் காரணம் :— காலம்.

காலமாவது வெய்யிற்காலம், பனிகாலம், மழைகாலமென மூவகையாகும். இக்காலங்களின் மாறுபாடுகளால் சரீரத்தில் திரிதோஷ நிலையும் மாறுபடுகின்றது.

காலங்களின் மாறுபாடாவது :—

இயற்கைக்கு விரோதமாயிருப்பது. அந்தந்த காலங்களின் குணம் மாறுபடுவதே. வெய்யிற் காலத்தில் வெய்யில் குறைவது, அல்லது அதிகப்படுவது அல்லது மழைகாலம் பனிகாலம்போலவிருப்பதும் வெய்யிற்கால மாறுபாடாம். மழைகால மாறுபாடாவது — மழை குறைந்து போவதும், அல்லது அதிகமாவது, அல்லது வெய்யிற்காலம், பனிகாலம் போலவிருப்பதுமாம். பனிகால மாறுபாடாவது — பனி குறைந்து போதல், அல்லது அதிகமாதல், அல்லது மழைகாலம், வெய்யிற்காலம்போல விருப்பதுமாம். இவ்விதம் கால இயற்கையின் மாறுபாடுகளால் சரீர இயற்கையிலும் மாறுபாடுகள் உண்டாகின்றன. கால இயற்கை ஒத்திருப்பின் அப்பொழுது சரீர இயற்கையில் மாறுபாடு உண்டாகின்றது. ஆனால் அம்மாறுபாடு சகஜமெனச் சொல்லப்படுகின்றது. (இவ்விரிவுகள் திரிதோஷ விமர்சம் என்ற தலையங்கத்தில் விவரிக்கப்படும்) சுலபமாகச்செய்யும் சிகித்சையால் அம்மாறுபாடுகள் நிவர்த்தியாகக்கூடுமென்று ஒத்திருக்கும் கால இயற்கையை ஆரோக்ய காரணமாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. முன்சொல்லியபடி காலஇயற்கையின் மாறுபாடுகளால் சரீரஇயற்கையின் மாறுபாடுகள் எவ்விதம் உண்டாகின்றனவென்பதை ஆராய்வோம். வெளி

சீதோஷ்ணங்களையனுசரித்து சரீரத்திலும் சீதோஷ்ணங்கள் மாறுபடுகின்றன. வெளியிலிருக்கும் அதிக வெப்பத்தால் சரீரத்திலும் உஷ்ணமதிகமாகின்றது. "விருத்தி: ஸமானை: ஸர்வேஷாம்" என்று வாக்படர் கூறும் விதம் வெளிவெப்பத்தால் சரீர உஷ்ணம் தூண்டப்படுகின்றது. சாதாரண காலங்களில் கூட வெய்யிலில் வசிக்கும் ஒருவனுக்கு சரீரத்தில் உஷ்ணாதிக்கமுண்டாவதுபோல ஆகாச மண்டலம்மிகுந்த தாபத்தையடையும் காலத்தில் அதற்கேற்றவாறு சரீர இயற்கையிலும் பித்தம் கொதிப்படைவதால் உஷ்ணமதிகரிக்கின்றது. இவ்விதமே வாதமும், கபமும், காலதோஷங்களால் சரீரத்தில் மாறுபாடடைந்து வியாதிகளுக்கு காரணமாகின்றன. காலதோஷங்களால் இயற்கையில் மாறுபாடு உண்டாவது போலவே ஐம்புலன்களின் வியாபாரங்களாலும் இயற்கையில் மாறுபாடு உண்டாகின்றது. அவ்விதமே கை கால் முதலிய கர்மேந்திரியங்களின் மிதமிஞ்சின வியாபாரங்களாலும் அம்மாறுபாடுகள் உண்டாகின்றன. ஆகவே இயற்கைக்கு ஒவ்வாத இந்திரியங்களின் செயல்களும், காலதோஷமும், தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ சரீரத்தில் முதலில் திரிதோஷங்களின் நிலையைக்கெடுத்து சரீரத்தின் ஒருபாகத்திலாவது அல்லது சரீரம் முழுவதிலாவது வியாதிகளை யுண்டுபண்ணுகின்றன. இந்திரியங்களின் ஒவ்வாத செயல்கள், காலதோஷம், பூச்சி, புழுக்கள், இவைகளால் சரீரத்தின் நிலைகெட்டு வியாதிகள் உண்டாகின்றனவென்பது ஆங்கிலமதம். முன் சொல்லியவைகளால் சரீரத்தில் வாத, பித்த, சிலேஷ்ம, நிலைமுதலில் கெட்டுப் பிறகே சரீரநிலைகெடுவதாக சுதேசிகளின் அபிப்பிராயம். இத்திரிதோஷங்கள் ஆங்கிலமுறைக்குமுறண்பட்டதல்லவென்றும் இவை ஒத்துக்கொள்ளத்தக்கவையென்றும் இன்னும் இதைச் சார்ந்த மற்றும் விவரங்கள் திரிதோஷ விமர்சம் என்னும் தலையங்கத்தில் இனிவரும் சஞ்சிகைகளில் காணலாம். இத்திரிதோஷங்கள் மாறுபடும் நிலைமைக்குத்தக்கவிதமாக வியாதிகளும் பலவிதமாகின்றன. உதாரணமாக பித்தம் மாறுபடும் நிலைமைக்குத்தக்கவாறு சிலருக்கு கண்ணெரிச்சல், சிலருக்கு கை கால் எரிச்சல், சிலருக்கு தாகம், சிலருக்கு மூச்சு அதிகமாக விடுதல், சிலருக்கு மூத்திரம் உஷ்ணமாக இறங்குதல் இது முதலிய பற்பல வியாதிகள் உண்டாகின்றன. இத்திரிதோஷங்களின் நிலைமை கெட்டே வியாதிகள் உண்டாவதால் அநேகமாக எல்லாவியாதிகளும் திரிதோஷங்களின் பெயரைக்கொண்டே அழைக்கப்படுகின்றன. வாதசுரம், பித்தசுரம், என்று இவ்விதமாகவே தோஷங்களின் பெயரை முற்கூட்டியே சுதேச நூல்களில் வியாதிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

தவிற ஒவ்வொரு வியாதியும் ஏழுவகையில் அடங்கிவருகின்றன. வாதம், பித்தம், சிலேஷ்மம், இவைகளைத்தனியாகவும் சேர்த்தும், கணக்கிட்டால் வகை ஏழு ஏற்படுகின்றது. அவையாவன:— (1) வாதம் (2) பித்தம் (3) சிலேஷ்மம் (4) வாதபித்தம் (5) வாதசிலேஷ்மம் (6) பித்தசிலேஷ்மம் (7) வாதம், பித்தம், சிலேஷ்மம், ஆக மூன்றும் சேர்ந்த சன்னிபாதம். ஆகவே சுரம் முதலிய பல வியாதிகள் ஒவ்வொன்றும் ஏழுவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சில வியாதிகள் சுபாவத்தால் வகை குறைந்தும் அதிகமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பிரமேகம் என்ற நீரிழவு வியாதி இருபது வகைகளாகவும், காசம் ஐந்து வகைகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்பிரிவுகள் முழுவதும் முக்கியமாக சிகித்சையின் மாறுபாட்டைமுன்னிட்டே ஏற்பட்டிருப்பதால் மாறுதல் இல்லாவிடத்தில் வகை குறைவாகவும், மாறுதல் அதிகமானவிடத்தில் வகைகள் அதிகமாகவும் கூறப்பட்டுள்ளன. தோஷங்களின் வகை ஏழாகிலும் இவைகளால்கெடும் சரீர தாதுக்கள் பலவாகையால், கெட்ட சரீரதாதுக்களையும் உபசமனம் செய்யவேண்டி சிகித்சையிலும் மாறுபாடுகள் பல உண்டாவதால், அவற்றை பனுசரித்து வியாதிகளை வகுக்கும்பொழுது பிரமேஹம் இருபது என்று சொல்லப்பட்டது.

திடீரென புதிதாக அதாவது அனுபவத்திற்கு வாாத ஒரு வியாதி உலகினிற்தோன்றுவதாக வைத்துக்கொள்ளுவோம். அதை ஆங்கில முறையில் சமாளிப்பது சாத்தியமா. அல்லது சுதேச முறையில் சமாளிக்கக்கூடுமா. வியாதியின் காரணம் தெறியாமல் மருந்து கொடுக்கக்கூடாதென்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட உண்மை. ஆங்கில முறைப்படி அந்த வியாதியின் காரணத்தைக் கண்டறிய பல வருஷம் செல்லும். பலவருஷம் சென்றும் கடைசியாக கண்டுபிடித்துவிடக்கூடுமென்ற நம்பிக்கையும் கிடையாது. Rheumatism என்ற வாத வியாதிக்கு காரணம் இன்னும் ஆங்கிலத்தில் உறுதிப்படவில்லை. காரணம் தெறிந்து கொள்வதற்குள் நோயாளியின் கதி என்னவாகுமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. ஆனால் சுதேச வைத்திய நூல்கள்,

“ விகாரநாமாகுசலோ நஜிஹ்ரீயாத் கதாசந
நஹி ஸர்வவிகாராணாம் நாமதோ ஸ்தித்ருவாஸ்திதி :
ஸஏவ குபிதோ தோஷ : ஸமுத்தான விசேஷத :
ஸ்தாநாந்தராணிச ப்ராப்ய விகாராந் குருதே பஹூந் ”

கூறுகின்றன. உலகினில் பல வியாதிகள் சம்பாவிதமாகையாலும், வருங்காலம் அளவில்லாததாலும், வியாதிகளை கணக்கிட்டுச்சொல்ல ஆதிசேடனாலும் முடியாது. அப்படி புதிதாகவரும் வியாதிகளில் பெயர் தெறியவில்லையென வைத்தியன் மனது நெகிழக்கூடாது. வியாதிகள் முழுவதும் திரிதோஷங்களைப்பற்றியே வருவதால் புதிதாகவரும் வியாதிக்கும் அவ்விதமே ஆனதுபற்றி பிரகோபத்தையடைந்த தோஷங்களின் லக்ஷணத்தை நன்கு நிதானித்து அதற்கு ஏற்ற சிகித்சையைச்செய்யவேண்டுமென்று சுதேச வைத்திய நூல்கள் தீர்மானிக்கின்றன.

வைத்திய உலகம்.

பாபநாசம் தாலூகா கீழவலுத்தூர் கிராமத்திலிருக்கும் நேடிவ் டாக்டரான ஸ்ரீமான் வைத்திய சடையன் என்பவர் உள்ளிக்கடையைச்சேர்ந்த கிருஷ்ணாபுரத்தில் வசிக்கும் ஸ்ரீமான் சுவாமிநாதமூப்பன் மகன் முனிய மூப்பன் என்பவருக்கு மேகசம்பந்தமான ஒரு புண்ணை ஆபரேஷன் செய்ததால் ஏற்பட்ட மரணத்திற்காக சப்டிவிஷனல் நியாயாதிபதி முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். அச்சமயம் தஞ்சாவூர் ஆஸ்பத்திரியில் அஸிஸ்டெண்டு சர்ஜனாக உத்தியோகம்பார்த்துவரும் ஸ்ரீமான் B. V. வரதாச்சாரியார் நியாயாதிபதி முன்னிலையில் கொடுத்தசாக்ஷிவாக்குமூலத்தின் சாரமாவது. “முனியன் என்பவன் இறந்தபிறகு பிரேத பரிசோதனையை நான் நடத்தினேன். வலது துடையிடுக்கில் ஒரு விரணம் காணப்பட்டது. இரண்டு அங்குலம் அகலமும் நாலு அங்குலம் நீளமும் ஒரு அங்குலம் ஆழமுள்ளதாகவும் அது காணப்பட்டது. புண்ணின் மேல்பாகம் கீழ்பாகத்துடன் சேர்த்து தைக்கப்பட்டிருந்தது. அடிவயிற்றின் உள்பாகத்திலும் அது வியாபித்திருந்தது. அதை கவனிக்கும்போது சிறுகுடலின் கடைசிபாகம் மிகவும் வெந்திருந்தது. அடிவயிற்றின் உள்பாகத்தையும் சிறுகுடலையும் ஒட்டியிருக்கும் உதர ஜவ்வின் மடிப்புகளில் glands என்ற கண்டங்கள் வெந்தும் பெருத்துமிருந்தன. உதரஜவ்வின் தாபநோகத்திலாவது அல்லது உதர ஜவ்வின் மடிப்புகளில் உண்டான ஓர்வித தாபரோகத்தினாலாவது மரணம் நேர்ந்திருக்கலாம். எந்த காரணத்தால் டை சஸ்திரசிகித்சை நடந்ததென சொல்லமுடியாது. குற்றம் சாட்டப்பட்டவர்போன்ற வைத்தியர்கள் ஆயுர்வேத வைத்தியர்களெனச் சொல்லப்படுவது எனக்குத் தெறியாது. அவர்கள் மூடவைத்தியர்கள் என்று இவ்விதம் சாக்ஷி கூறுகையில் டிபன்ஸ் வக்கீல் சொன்னதாவது :— இவர் சொல்லு

வது ஓர் அபிப்பிராயபேதம். டாக்டர் A. லக்ஷ்மீபதி போன்ற ஆங்கில வைத்தியத்தில் தேர்ச்சிபெற்ற பலர் ஆயுர்வேத விஷயத்தில் சாக்ஷி கூறிய அபிப்பிராயத்திற்கு மாறுபட்ட அபிப்பிராயம் கூறுகின்றனர். அவர்களின் யோக்கியதை இப்பொழுது வாக்குமூலம் கொடுக்கும் டாக்டர் அவர்களும் மறுக்கமுடியாது. ஸ்ரீமான் வைத்திய சடையன் அவர்கள் கொடுத்த ஸ்டேட்மெண்டின் சாரமாவது :— போலீசார் குற்றபத்திரிகையில் கூறிய வண்ணம் நான் குற்றமொன்றும் செய்யவில்லை. மூன்று தலைமுறைகளாக எனது வமிசத்தார் ஆயுர்வேத முறைப்படி சஸ்திர சிகித்சை செய்துவருகின்றனர். என் இருபதாவது வயதில் இதைநான்கற்று தற்காலம் 22-வருஷங்களாக அனுபவம் பெற்றிருக்கிறேன். என் சுற்றத்தார் திருச்சியில் இப்பொழுது சஸ்திர சிகித்சை செய்துவருகின்றனர். தவிர என் அனுபவத்தாலும் இவ்வித்தையில் பூர்ண தேர்ச்சி எனக்கு உண்டு. என் மாமனும் இவ்வித்தையில் பாண்டித்யம் பெற்றவர். அவர் வலத்தூர் கிராமத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சிகித்சை செய்துவருகின்றார். ஆங்கில வைத்தியர்கள் கைவிட்ட பல ஆயிரக்கணக்கான கேசுகளை குணப்படுத்தியிருக்கின்றார். ஆங்கில வைத்தியர்கள் 200 ரூபாய் எதிர்பார்த்த கேசுகளை 10 அல்லது 15 ரூபாய்களைப்பெற்றுக்கொண்டு குணப்படுத்தியிருக்கின்றார். பிராசிகியூஷன் தரப்பில் ஆஜரான முதல் சாக்ஷி இறந்தவரின் பெண்ஜாதி. இந்த அம்மாள் மேகவியாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தாள். இந்தஅம்மாள் சிபார்சுசெய்தபிறகே நான் அந்த கேசை ஒப்புக்கொண்டேன். புண்ணை கீறிவிடும்படி இறந்தவரே என்னைக் கேட்டுக்கொண்டார். பிந்திய வியாதிகள் இறந்தவருடைய அஜாக்கிரதையால் உண்டாயிருக்கவேண்டும். பகல் 4-மணிக்கு நான் ஆபரேஷன்செய்தேன். புண்ணின்மேல் சுத்தியை வைத்தவுடன் இறந்தவர் என் கையைப் பிடித்துக்கொண்டு முறண்செய்தார். பிறகு இவ்விபத்துஏற்பட்டது உடனே புண்ணை தைக்கவேண்டியது அவசியமென நினைத்தேன். உடனே அய்யம்பேட்டை ஆஸ்பத்திரிக்கு நோயாளியை கூட்டிப்போனேன். ஆஸ்பத்திரி மூடியிருந்ததால் உடனே டாக்டர் வீடு சென்றேன். டாக்டர் என்னை வெளியில் நிறுத்திவிட்டு நோயாளியை மாத்திரம் உள்ளே இட்டுச்சென்றார். புண்ணை அவிழ்த்துப்பார்த்தார். ஆனால் சிகித்சை ஒன்றும் செய்யவில்லை. பிறகு டாக்டர் வெளியில்வந்து ஆபீசுகாலமல்லாத காலங்களில் நோயாளிகளை கவனிக்க முடியாதென என்னிடம் சொன்னார். அக்காலங்களில் பார்க்கும் கேசுகளுக்கு பெருந்தொகைதரவேண்டுமென இக்சித்தார். எங்கள் இரு

வருக்கும் வார்த்தை தடித்தது. பிறகு இரவு 11-மணிக்கு கம்பவுண்டரும், டாக்டருமாக அவ்விடத்தில் சிகித்சைசெய்ய முடியாதெனச்சொல்லி ஒரு கடிதம் தஞ்சாவூர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். வரும் வழியில் வண்டி அதிர்ச்சியால் சிறுகுடல் வெளியில் வந்திருக்கலாம். நான் மிகவும் ஜாக்கிரதையுடன் ஆபரேஷன் செய்தேன். மிகவும் கியாதியடைந்த ஆங்கில டாக்டர்கள் செய்யும் ஆபரேஷனிலும் எவ்வளவோ மரணங்கள் நேரிடுகின்றன. இறந்தவரும் அவர் பந்துக்களும் பூர்ணசம்மதி கொடுத்தபிறகுதான் நான் ஆபரேஷன் செய்தேன். நான் ஒருவித குற்றமும் செய்யவில்லை. என்னை விடுதலைசெய்யவேண்டும்.” இது சம்பந்தமாக சென்னையில் தலைமை ஆபீசில் இண்டியன் மெடிகல் அசோசியேஷன் அடியில்கண்டபடி தீர்மானம் செய்திருக்கிறது. “ஸ்ரீமான் வைத்திய சடையன் அவர்களுக்கு சகாயம் செய்வதும் தவிர ஆயுர்வேத முறைப்படி பாண்டித்யம் பெற்றவர் ஆங்கில வைத்தியர்போல சஸ்திர சிகித்சை செய்யமுடியுமாவென்பதை ஓர் குறிப்பிட்டவருக்கல்லாது பொதுவில் உண்மைக்காக போராடவேண்டும்” மேற்சொன்ன அசோசியேஷன் அவசியமானால் ஹை கேசை நடத்த சென்னையில் ஒரு வக்கீலை அமர்த்துவதாகவும் அதற்காக டாக்டர் A. லக்ஷ்மீபதியவர்கள் சென்னையில் ஓர் நிதிசேர்க்க சகோதர வைத்தியர்களுக்கு மனுசெய்துகொண்டிருப்பதாகவும் தெரிகின்றது.

ஓர் அதிசயம்.

பொன்னேரிக்கு தென்மேற்கில் 12-மைல் தூரத்தில் சமுத்திரக்கரையில் இருக்கும் புலிகட் என்ற சிறுகிராமத்தில் ஓர் மகமதியர் வசிக்கிறார். அவர் ஒவ்வொரு பௌர்ணமையிலும் பெருவியாதியால் வருந்தும் ஜனங்களுக்கு ஓர் மூலிகை கொடுத்துவருகிறார். அதற்கு அவர் யாதொரு பிரதிபலனும் விரும்புவதில்லை. அதில் விசேஷமென்னவெனில் அவர் அம்மூலிகையை தன்கையில் வைத்துக்கொண்டு நோயாளியைவாயைத்திறக்கச்சொல்லி நேராக நீட்டுகின்றார். நோயாளி அவர்கையிலிருந்து அம்மூலிகையை நேராக கவ்வி கடித்து மென்று தின்னவேண்டியதே. ஒவ்வொரு பௌர்ணமையிலும் ஆயிரக்கணக்காக ஜனத்திரள் கூடுகின்றது. பலர் சௌக்கியமடைகின்றனர். சுமார் ஆறுமாதமாக இவ்வதிசயம் நடைபெறுகின்றது.

21045

நமது வழக்கங்கள்.

(ஸ்ரீ பார்த்தஸகன் எழுதுகிறார்.)

நம் நாட்டில் இருந்துவரும் ஆசார அனுஷ்டானங்களும், பழக்க வழக்கங்களும் சாஸ்திரீய ஆராய்ச்சியும் அனுபவமும் முதிர்ந்த தேகக்கூறு சாஸ்திர நிபுணர்களான மகரிஷிகளால் வரையறுக்கப் பட்டவைகளென்று முன்சஞ்சிகையில் நாம் கூறியிருப்பது “சந்திரிகா” நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

காலையில் படுக்கையினின்று எழுந்திருப்பதிலிருந்து இராத்திரி மறுபடி படுக்கைக்குப் போகும்வரையில் நம்மவர்களின் அனுஷ்டானத்தில் செய்யும் கார்யங்களில் ஒவ்வொரு சிறிய விஷயங்களும் கவனித்துப் பார்த்தால் சாஸ்திரீயமான இன்றியமையாத தேக ஆரோக்கிய சாதனங்களென எளிதில் தெரிந்து கொள்ளக்கூடும்.

முதலில் காலையில் துயில் நீக்கவேண்டுமென்றிருக்கிற ஏற்பாடே ஆரோக்கியத்தைத் தரத்தக்கதென்று. ஐரோப்பியர் இத்துறையில் ஆராய்ச்சி செய்யப் புகுவதற்குமுன் மேல்நாட்டாரிடத்தில் இந்தவழக்கம் விடியற்காலத்தில் துயில் துறப்பது பழக்கத்திலிருந்ததாகத் தெரியவில்லை. “வைகறையில் துயிலெழு” “பஞ்ச பஞ்ச உஷத்காலத்தில் எழுந்து உன் கடமைகளை செய்” இதுபோன்ற வாக்கியங்கள் நமது நாட்டில் சர்வசகஜம். “ஜேம்ஸ் ஆலன்” என்ற பெயர் போன அனுபவ ஆங்கில ஆசிரியர் ஒருவர் “ஒருதினத்தை சந்தோஷமாக நீ கழிக்கவிரும்பினால் விடியற்காலத்தில் நித்திரையை நீப்பது, நீ அதை ஆரம்பிக்கவேண்டும். நான் எழுதிமுடித்த புத்தகங்களில் முக்கால் பாகத்தை காலையில் 4-முதல் 6-மணிக்குள்ளே எழுத சாத்தியமாயிருந்தது” என்று எழுதியிருப்பதை படித்தஞாபகம் வருகிறது. காலைக்காற்று தூக்கத்தில் இளைப்பாரின உள் உருப்புகளுக்கு புதிய ஊக்கத்தையும் வேகத்தையும் தரவல்லதென்பது எந்நாட்டினரும் ஒப்புக்கொள்ளும் உண்மை.

மல ஜலபாதைகளை நிவர்த்தி செய்யும் விஷயத்தில் எவ்வளவு கண்டிப்பான கட்டளைகளை நம் முன்னோர் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்? ஊருக்கு வெளியில் ஜனசஞ்சார மில்லாத இடத்தில் பச்சை மரங்கள் இல்லாத இடத்தில் மேற்கூறிய பாதைகளை கழிக்க வேண்டுமென்பது கட்டுப்பாடு. காலையில் சிறிது தூரம் நடந்து செல்

வதால் இராத்திரி முழுமையும் ஓய்ந்திருந்த அவயவங்களுக்கு ஓர் வகை சுருசுருப்பும் மனிதன் விழித்திருக்கிற நிலைமைக்கு ஏற்ற இரத்த ஓட்டமும் ஏற்படுகின்றது. ஜனவாச மில்லாத இடத்திற்கு செல்வதால் ஷெடி மலங்களிலிருந்து உண்டாகும் கிருமிக் கூட்டங்கள் வியாதி விசேஷங்களை எங்கும் பரப்பாமல் காப்பது சுலபமாகின்றது. தாவரவர்க்க வளர்ச்சியையும் கூட அவைகள் தடுக்கக் கூடுமென்று அறிந்து பசு மரத்தடிகளில் ஆபாசம்செய்யக்கூடாதென்று கூறும் நமது பெரியோர்களை சுகாதார அறிவு இல்லாதவர்கள் என்று மூடர்களைத்தவிர யார் கூறத்துணிவார்கள்.

இதற்கடுத்தது பிராதஸ்நானம். பொதுவாக குளிர்ந்த ஜலத்தில் முழுகுவதே தேகத்திற்கு நன்மை செய்வதாயினும் காலையில் — சூரிய உதயத்திற்குமுன் — குளிர்ந்த தண்ணீரில் ஸ்நானம் செய்வது அவயவங்களின் சக்திகளை சுயஸ்திதிக்கு கொண்டு வந்து சரிவர வேலைசெய்ய ஆயத்தப் படுத்துகிறது. மனிதனுடைய நற்காரியசித்திக்கெல்லாம் தடையாய் நிற்கும் சோம்பலை யொழித்து, எதாவது வேலை செய்யலாம் என்ற உணர்ச்சியை உண்டாக்குகிறது.

ஸ்நானஞ்செய்து விட்டு ஒருவேலையைத் துவக்கினால் சுருசுருப்புடனும் உத்ஸாகத்துடனும் அதை முடிவுவரை செய்ய வல்லவர்களாயிருக்கிறோமென்பது நாமனைவரும் அனுபவத்தில் அறிந்திருக்குமோர் மறுக்க முடியாத உண்மை. இந்தியர்களுடைய பழக்க வழக்கங்களை முழுமையும் கண்டித்து இழிவு படுத்துவதிலேயே தன்வாழ்நாளை கழித்த ஆங்கில சுகாதார நிபுணர் ஒருவர் “இந்தியர்களிடம் இவ்வளவு குறைகள் இருப்பினும் ஓர் உயரிய வழக்கமிருக்கிறது. அதை நாம் ஒப்புக்கொள்ளாமல் தீராது. காலைஸ்நானம் என்ற உத்தம பழக்கத்தை தெய்வம்போல் அவர்கள் போற்றுகிறார்கள். ஜன சமூகத்தின் சுகாதார அறிவாகிய பொக்கிஷம் இந்தியர்களின் இந்த வழக்கத்தையும் சேர்த்தாலன்றி பூர்த்திபெறாது.” என்று மிகவருத்தத்துடன் ஒப்புக்கொள்ளுகிறார்.

நம் பெரியோர்களின் பேரறிவை பெரிதும் எடுத்துக் காட்டும் இன்னொரு அதிசயமான வழக்கம் ஒன்று இருக்கிறது. ஸ்நானம் செய்வதற்கு முன்பும், பிறகும் ஆசமனம்செய்வது. அதாவது துளித்துளியாக தண்ணீரை உட்கொள்ளுவது வேதியர்கள் செய்யவேண்டி முக்கிய கடமைகளில் ஒன்று. பார்ப்பது மிக அல்பமாகத்தோன்றும் இதில் பெரியதோர் சுகாதார சாஸ்திர உண்மை அடங்கிநிற்கிறதென்பதை அதைக்குறித்து ஆராயாதவர்களுக்கு வெளிப்படை

யாகத் தோன்றுவது சற்று சிரமந்தான். முற்காலத்தில் தீர்த்த யாத்திரை செய்வதை லோகஅனுபவ அறிவுவளர்ச்சிக்கு இன்றியமையாததென நம் முன்னோர் கருதி செய்து வந்தார்கள். அப்போது பலவித ஜலத்தில் ஸ்நாநம் செய்வது அவசியமாயிருந்தது. வெவ்வேறுவித குணமுடைய தண்ணீரில் ஸ்நாநம் செய்வதால் தேகத்திற்கு ஏற்படும் உபாதியைதடுக்கவே அவர்கள் ஆசமனத்தை ஏற்படுத்தினார்கள். எந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்யப்போகிறோமோ அதே ஜலத்தை ஸ்நாநத்திற்கு முன்னும் பின்னும் துளித்துளியாக உட்கொள்ளுவதால் தேகத்தில் இயங்கும் இயந்திரங்களை அந்தஜலத்தின் இயற்கைக்கு இசைவிக்கிறோம். இது சாஸ்திர வித்பந்நர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

மேலும் அமெரிக்க வைத்திய நிபுணர் ஒருவர் மலச்சிக்கலுக்கு (Constipation) நவநாகரீக சிகாமணிகளில் பலரைத்தன் இருப்பிடமாகக் கொண்ட ஓர் கொடியவியாதி — அரைடம்ளர் தண்ணீரை துளித்துளியாக காலை மாலையில் அருந்துவதுதான் உயர்ந்த சிகிச்சா முறையென்று சிலவருஷங்களுக்கு முன்புதான் கண்டு பிடித்திருக்கிறாராம். 'மலச்சிக்கல்' வியாதியில் வருந்துவோர் இதை அனுஷ்டித்து நன்மையடையலா மென்பது அனுபவ பூர்வமாய் அறியக்கூடிய விஷயம். எத்தனை ஆயிரம் வருஷங்களாக இந்த உயரிய வழக்கம் நம்நாட்டில் இருந்து வருகிறது!

ஆகாரம்.

மனிதன் உட்கொள்ளும் ஆகாரம், நித்திரை, பிரம்மசர்யம் என்று மூன்று தூண்கள் சரீரம் என்ற வீட்டிற்கு அவசியமாகின்றன. தூண்களின்றி வீடு நிலைத்திருப்பதில்லை. அதுபோலவே சரீரத்தின் ஆரோக்யத்திற்கு மேல்சொல்லிய மூன்றும் அவசியமானவை. அவை மூன்றில் முதன்மையாக ஆரோக்யத்திற்கு ஆகாரமே காரணமாகின்றது. இவ்வாகாரம் எல்லா மனிதர்களுக்கும் பெரும்பாலும் பொதுவாக விருந்தாலும் சில ஆகாரம் சில சரீரங்களுக்கே ஏற்றதாகவும் சிலவற்றிற்கு ஏற்காமலு மிருக்கின்றது. ஆகையால் ஒவ்வொருவரும் தன் சரீர நிலைமை நிதானித்து உசிதமான உணவை உட்கொள்ளவேண்டியது அவசியமாகின்றது. உதாரணமாக — பிறந்தநாள்முதல் எல்லாருமே பசும்பாலை உபயோகிக்

கின்றனர். பால்யமுதல் பழகிய பசும்பால் சிலநாட்களுக்கு பிறகு சிலருக்கு ஏற்றுக்கொள்ளாமல் தொந்திரவை யுண்டுபண்ணுகின்றது. சுமார் 70-வயதுள்ள ஒரு பெரியவர் அதிசாரம் என்ற ஓர் வியாதியால் வருந்தி கடைசியாக ஓர் ஜில்லாவில் ஆங்கில ஆஸ்பத்திரியில் சிகித்சைபெற்றார். அவ்வாஸ்பத்திரியில் பெரிய பதவி வகிக்கும் டாக்டர் அவர்கள் அந்நோயாளிக்கு தனியாக பாலையே பத்திய உணவாக நியமித்தனர். தன்சரீரக்கூறுக்கு பால் ஏற்கவில்லையென பன்முறை நோயாளிவேண்டியும் அதை ஏற்காது டாக்டர் அவ்வாகாரத்தையே வற்புறுத்தினர். இவ்விதம் மாதம் ஒன்று கழிந்தது. வியாதி அதிகரித்தவுடன் நோயாளி மிகவும் பலம்குன்றி நடமாட சக்தியற்று கடைசியாக ஆஸ்பத்திரி சிகித்சையை மாத்திரம் ஒப்புக்கொண்டு பத்தியத்தை மாற்றிக்கொண்டதில் உடனே பலனுற்றார். இவ்விதம் பலர் சரீரத்துக்கொவ்வாத உணவை பலாத்காரத்தால் உபயோகித்து தொந்திரவு அடைவதைப்பார்க்கலாம். அவரவர்கள் சரீரத்துக்கேற்ற உணவை அவரவர்களே நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். ஆனால் அவ்வுணவு வைத்திய நூல்களை யனுசரித்து ஆரோக்கியத்தை விருத்தி செய்வதாக விருக்கவேண்டும். சில கெட்ட ஆகாரங்கள் உடனே சரீரத்திற்கு பாதை விளைவிக்கக்கூடியதாகவும், சில கால கிரமத்தில் பாதை செய்யக்கூடியதாகவு மிருக்கின்றன. ஆகையால் சாஸ்திரங்களால் உணவுப் பொருள்களின் குண குணங்களை யறிந்துகொண்டு சாஸ்திர சம்மதமான பொருள்களில் தன் சரீரத்திற்கேற்ற உணவை எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வுணவுப் பொருள்களை கிடைக்கும் வண்ணமே யுபயோகிப்பதும் அவைகளை பக்குவமாக்கியுபயோகிப்பதும் நமது இஷ்டத்தைப்பொருத்ததல்ல. பொதுவில் சரீரத்திற்கேற்றவாறு பதார்த்தங்களைப் பக்குவம்செய்யும் வழிகளை பாகசாஸ்திரம் உலகிற்கு போதிக்கின்றது. தவிர தொன்றுதொட்டுவந்த பழக்கமும் அம்முறைகளை கற்பிக்கின்றது.

இவ்விதமிருக்க சிலர் இயற்கையில் அமைந்தவாறே வஸ்துக்களை உபயோகிக்கவேண்டுமென்றும், அப்படி உபயோகிப்பதால் சரீரத்திற்கு ஆரோக்கியம் பெருகுவதாகவும், பழைய காலங்களில் காட்டில் வசித்த பெரியோர்கள் கையில் அகப்பட்ட காய் கிழங்கு முதலியவைகளை பக்குவஞ்செய்யாமல் புசித்துவந்தனரென்றும், ஆகையால் அவர்கள் சரீரதிடத்துடன் சுகமே வாழ்ந்தனரென்றும், உதாரணமாக அரிசி முதலியவைகளை உரலில்போட்டு [illegible] தீட்டுவதால் அரிசியின்மேல் பாகத்திலிருக்கும் சத்து

குறைந்து போகின்றதென்றும், அரிசியை பக்குவம் செய்து கஞ்சியை வடிப்பதால் அதிலிருக்கும் சத்து நீங்கிவிடுகிறதென்றும், ஆகவே நம்நாட்டிலிருந்து வரும் தத்காலவழக்கம் முற்றிலும் ஆரோக்கியத்திற்கு விருத்தமென்றும் பலவிதமாக நினைக்கின்றனர். மனிதன் நீங்கலாக மற்ற பிராணிகள் பதார்த்தங்களை கிடைத்தவாறே உபயோகிக்கின்றன. ஆகையால் அவைகளுக்கு பிணிகள் அணுகுவதில்லை யெனவும் நினைக்கின்றனர்.

இவ்வபிப்பிராயங்கள் நமதுசுதேச வைத்தியநூல்களுக்கும் நமது பெரியோர் வழக்கங்களுக்கும் முரண்பட்டதாக இருப்பதுடன் அனுபவத்திற்கும் ஒத்ததாக நினைக்கமுடியவில்லை. ஒவ்வொரு இயற்கை வஸ்துக்களும் குணதோஷங்கள் நிறையப்பெற்றதாகவே இருக்கின்றன. அக்குணங்கள் சரீர ஆரோக்கியத்திற்கும் அத்தோஷங்கள் சரீர வியாதிகளுக்கும் காரணமாக இருக்கின்றன தோஷமின்றி குணம் மட்டும் நிறைந்த பதார்த்தம் கிடைப்பது அரிது. அத்தோஷங்களை செயற்கையால் மாற்றி உணவாக உட்கொள்ளவேண்டியது மனிதன் கடமை. முற்காலங்களில் மகரிஷிகள் இயற்கைப்பொருள்களை அப்படியே யுபயோகித்தனர் என்பதும் கட்டுக்கதை. புராணங்களைப் படித்துப்பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை விளங்கும். பாண்டவர்கள் வனவாசம் செய்யும் பொழுது உடன்வசித்த பெரியோர்களுக்கு அக்ஷய பாத்திரம் பெற்று அன்னம் வழங்கினரென்று பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. மற்றபிராணிகளை மனிதருக்கு ஒப்பிடலாகாது. ஆடு, மாடு, புலி, என்பவைகள் பிராணிவர்க்கத்தைச் சேர்ந்ததாயினும் அவைகள் ஒன்றுக்கொன்று ஆகாரத்தில் மிகுந்த மாறுபாடு அடைகின்றன. அவைகளுள் இயற்கைபேதத்தை ஒப்புவதுபோல மற்ற பிராணிகளுக்கும் மனிதனுக்கும் ஆகாரத்தில் பேதத்தை ஒப்புக்கொள்ள வேண்டியதே. உதாரணமாக — மாடுகளுக்கு பிரதிதினம் அரிசியை உபயோகித்து வருவதால் யாதொருதீங்கும் அவைகளுக்கு உண்டாவதில்லை. மனிதன் அவ்விதப் பக்குவமில்லாத அரிசியை சிலநாள் உட்கொண்டால் உடனே சோகை, காமாலை அல்லது பாண்டு, போன்ற பெரிய வியாதிகள் சம்பவிக்கின்றன. சரீரத்திற்கொவ்வாத அத்தோஷம் விலகவேண்டி பக்குவமாக்கி மனிதன் உபயோகிக்க நேரிடுகின்றது. அபக்குவமான வஸ்துக்களில் தோஷம் விலகாமலிருப்பதுபோல அதிபக்குவமான வஸ்துக்களில் குணம் குறைந்து விடுகின்றது. ஆகையால் பெரியோர்கள் அபக்குவம் அதிபக்குவம் இரண்டும் சரீரத்திற்கு பாதகம் விளைவிக்கக்கூடியவைகள் என நினைக்கின்றனர். (தொடரும்.)

சாமானியமனிதனும் குடி, ஏழ்மை, அதிகவேலை, முதலியவைகளால் புழுக்களை எதிர்க்கும் சக்திகுன்றி மிகவும்சீக்கிரமாக வியாதிக்குள்ளாகின்றான். ஆகையால் பொதுஜனங்கள் குடியையொழித்தும், ஆரோக்ய ஸ்தலங்களில் வசித்தும், பலத்திற்குத்தகுந்த வேலையும், சுகாதார விதிகளையும், கவனித்து அனுஷ்டித்தும் வந்தால் பலகாய்ச்சல்களுக்கு இரையாகாமல் தப்பக்கூடும். இவ்விதமே இங்கிலாந்தில் பிளேக், காலரா, முதலிய சிலவியாதிகள்மறைந்தன. டைபாயிட் என்ற சந்ததஜ்வரமும் மறைந்துகொண்டு வருகின்றது. ஆனால்க்ஷயம் இதற்கு அடங்காமலிருக்கின்றது. இதைத்தணிக்க நோயாளிகளை சுகாதார வசதியில் தனியாக வைத்தும், ஏற்கனவே அவர்கள் குடியிருந்தவீடுகளை சுத்திசெய்தும், பலனில்லாமற்போயிற்று. ஆரம்பத்தில் அவ்வியாதியை கண்டுபிடிக்க முடிவதில்லை. கடைசி நிலைமையில்தான் கண்டுபிடிக்க சாத்தியமாகிறது. அதற்குள் அவ்வியாதி நெடுக பரவிவிடுகின்றது. இன்ப்ளுயன்சா என்ற கபசன்னிபாத சுரமும், பெரிய அம்மையும், திடகாத்திரனான மனிதனுக்கும் ஒட்டக்கூடிய வியாதிகளாகக்கருதப்படுகின்றன. வைசூரியைத்தடுக்க ஆங்கிலமுறையில் அம்மைகுத்துதல் என்றவழியை உபயோகிக்கின்றனர். டைபாயிட் என்ற சந்தத சுரத்திற்கு ஆங்கில வைத்தியத்தில் அம்மை குத்தியபோதிலும் அது பிரயோசனமுள்ளதாகவிருக்கவில்லையென இந்த கடைசி யுத்தத்தில் அறிந்தனர். காலரா, பாம்புக்கடி, இவைகளை நிவர்த்திக்க அம்மை குத்தும் மார்க்கத்தை பரிசீலனைசெய்து பார்த்துவருகிறார்கள். ஒருமனிதனுக்கு அவன் ஆயுசுகாலத்தில் ஒரு தடவைதான் வரக்கூடியதும் இரண்டாவது தடவை வருவதே ஆபூர்வ சம்பாவிதமாகவுமிருக்கக்கூடிய பெரிய அம்மை, டைபாயிட் என்ற சந்தத ஜ்வரம், இவைகளுக்குத்தான் அம்மைகுத்துதல்என்பது விலக்கும் வழியாகும். அஃதின்றி அடிக்கடி வறக்கூடிய இன்புளுயன்சா என்ற கபசன்னிபாதம்போன்ற வியாதிகளுக்கு அம்மை குத்துதல் விசேஷபலனளிக்காது. காய்ச்சலுக்கு பிரதானகுறி சரீரத்தில் இயற்கைக்கு அதிகமான உஷ்ணமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இயற்கைக்கு அதிகமான உஷ்ணம் அளக்கும் கருவிகளால் நிர்ணயிக்கப்படுகின்றது. அல்லது நாடி நடையாலும் உஷ்ணத்தின் வித்தியாசத்தை நிர்ணயிக்கவும் கூடும். ஆரோக்ய காலத்தில் சரீரத்தில் இயற்கையில் உஷ்ணகிரியையும், உஷ்ணசமகிரியையும் துல்யமாக நடைபெறுகின்றது. அப்பொழுது சமசீதோஷ்ண நிலைமையில் சரீரம் இருக்கின்றது. அவ்விரண்டு தொழிலும்தடைபடும்பொழுது சரீரத்தில் சீதோஷ்ணநிலைமைகள் வித்

தியாசப்படுகின்றன. அதிலும் சரீரத்தில் உஷ்ணோத்பத்திதொழில் தூண்டப்பட்டும் உஷ்ணசமனத்தொழில் பாதிக்கப்பட்டும் போவதால் இயற்கைக்கு அதிகமான உஷ்ணம் ஏற்படுகின்றது. மாயிசம், கிலேண்ட்என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் சில கண்டங்கள், இவைகள் அதிகம்அழிவதாலும் உஷ்ணமிகுதி யுண்டாகின்றது. ஓர் ஆரோக்யமுள்ள மனிதன் சரீரத்தில் ஒரே தேசகாலத்தில் ஒரேவித ஆகாரத்தில் ஓர் குறிப்பிட்ட காலத்திற்குள் உண்டாகும் உஷ்ணத்தைக்காட்டிலும் காய்ச்சலுள்ளமனிதன் சரீரத்தில் அதிக உஷ்ணம் உண்டாகின்றது. காய்ச்சலுள்ளவன் உட்கொள்ளும் ஆகாரம் சுவல்பமே, அவன் சரீரத்தில் அளவுக்கதிகமான தாது சோஷணத்தால் உஷ்ணம் அதிகரிக்கின்றது. காய்ச்சல் தாது சோஷணத்தையொட்டியிருக்கிறதென்று நோயாளியின் மூத்திர பரிசீலனையில் காணப்படும் சரீர சத்துக்களால் அறியலாம். சுதேச வைத்தியநூல்கள் இவ்விடத்தில் சற்று மாறான அபிப்பிராயம் காட்டுகின்றன. தாது க்ஷயத்தால் சரீரத்தில் உஷ்ணமதிகமாகின்றதா அல்லது காய்ச்சலால் தாது க்ஷயமுண்டாகின்றதா என்பது கேள்வி. சரீரத்தில் வெளிக்காட்டும் உஷ்ணாதிக்கத்திற்கு யுக்தி சொல்லுவதற்காகவே முதலில் தாதுக்ஷயமும் பிறகு உஷ்ணமிகுதியுமென்று கிரமம் ஆங்கிலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. சரீரத்தில் அளவுக்குமிஞ்சிய உஷ்ணத்தால் கொஞ்சம் கொஞ்சமாக தாதுக்கள் க்ஷீணமாகி மூத்திரம் முதலியவைகளிலும் அப்பாகம் வெளியேறுகின்றது. "மலம் ஜ்வரோஷ்மா தாதூந்வா ஸீக்ரம் க்ஷபயேத்" என்று வாக்படர் கூறுமிடத்தில் ஜ்வர வெப்பத்தால் சரீரத்திலுள்ள சர்வ தாதுக்களும் க்ஷீணமடைகின்றன என்று வியக்தமாகின்றது. தவிர சில காய்ச்சல்களில் தாதுக்கள் மூத்திரத்தில் இறங்காமலிருப்பதுமுண்டு. காய்ச்சலால் தாது சோஷமும், பிறகு தாது சோஷிக்க சோஷிக்க காய்ச்சல் விருத்தியடைவதும், இவ்விதம் ஒன்றையொன்றுபற்றியிருப்பதுமுண்டு. ஆங்கிலத்தில் காஸ் (gass) என்று சொல்லப்படும் வாத விசேஷங்களால் சரீரத்தில் உஷ்ணத்திற்கு காரணமான தகனம் நடைபெறினும் அதற்கு விசேஷகாரணமாக பித்தமென ஒரு பதார்த்தம் சுதேசமுறையில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. "ஊஷ்மா பித்தா திருதே நாஸ்தி" என்ற வசனத்தில் பித்த சம்பந்தமின்றி உஷ்ணமுண்டாகாது என்று நூல்கள் கூறுகின்றன. வாத, பித்த, சிலேஷ்மங்களைப்பற்றிய விவரம் வைத்திய சந்திரிகையில் திரிதோஷம் என்ற தலைப்பக்கத்தில் கண்டுகொள்ளவேண்டியது. ரசம், ரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜை, சுக்ரம் என்ற ஏழுதாதுக்களி

லும் இப்பித்தம் வியாபித்திருக்கின்றது. ஒவ்வொரு தாதுக்களிலும் இருக்கும் பித்தம் அந்தந்த தாதுக்களில் தகனகிரியையை நடத்தி உஷ்ணத்தை கொடுப்பதால் அந்தந்த உஷ்ணம் தாதுக்களின் பெயரைக்கொண்டே ரக்தோஷ்ணம், மாமிசோஷ்ணமென இவ்விதம் அழைக்கப்படுகின்றது. பொதுவில் சரீரத்தில் தகன காரித்தொழிலை நடத்துவதற்கு பித்தமெனப்பெயர். சரீரத்திலிருக்கும் தாதுக்களை பசனம் செய்வதே தகனகாரித்தொழில் எனப்படுகின்றது. அதுபோலவே உட்கொள்ளும் ஆகாரத்தை பசனம் செய்யும் பதார்த்தத்திற்கும் பித்தமென்றே பெயர். ஆனால் தாதுக்களிலிருக்கும் பித்தத்திற்கும் ஆகாரத்தை பசனம் செய்யும் கல்லீரல் பித்தத்திற்கும் சுபாவத்தில் வித்தியாசமுண்டு. ஆனால் கல்லீரல் பித்தமே மற்ற பித்தங்களுக்கு ஜீவாதாரமாயிருக்கின்றது. காய்ச்சல் வருவதற்குமிந்நியே கல்லீரல் தொழில்குன்றி அப்பித்தம் சரியாக இடங்களில் சேராமல் ரக்தக்குழாய்கள் வழியாக ரக்தத்தில் சேர்ந்து விடுகின்றது. ஆகாரதோஷ ம்முதலியவைகளால் சிறுகுடல் பெருங்குடல் இவைகளில் காஸ் (gass) என்ற வாயு விசேஷங்கள் அதிகமாகவுண்டாகி அவைகள் அனுலோபமாக வெளியேறாமல் ரக்தக்குழாய்களிலும், இரைப்பையிலு முட்சென்று சரீரம் முழுவதும் வியாபரிக்கின்றன. அதனால் இரைப்பையிலும் மற்றும் குடல்களிலுமுள்ள அபக்வ ஆகாரத்தை கெடுக்கின்றன. பிறகு பித்தப்பையில் கலந்து ஈரல் வேலையையும் தடுத்து பித்தம் சரிவர குடல்களில் ஆகாரத்துடன்கலக்காமல் செய்து, வெளியேற வேண்டிய பித்தத்தையும் ரக்தக்குழாய்கள்வழியாக ரக்தத்துடன் கலக்கும்படி செய்கின்றது. அளவுக்குமிஞ்சிய பித்தம் ரக்தத்தில் கலந்தவுடன் மற்ற தாதுக்களிலும் பித்தம் அதிகப்படுகின்றது. சரீர பாகங்களில் தகனகாரி காரணம் அதிகப்படுவதால் அதற்கு தகுந்த விதமாக தகனமும் அதிகப்படுவதால் உஷ்ணம் சரீரத்திலும் மற்ற உள் தாதுக்களிலும் அதிகமாகின்றது. அந்த வெப்பத்தால் சரீரத்திலுள்ள சௌம்ய தாதுக்கள் சோஷிக்கின்றன; தகனகாரித்தொழிலை சரீரத்திற்கேற்றவாறு மிதப்படுத்தும் வஸ்துக்களுக்கு சௌம்ய தாதுக்கள் எனப்பெயர். "சௌம்யதாது ப்ரசோஷணாத்" என்று சரகர் சொல்லியவிதமாக அத்தாதுக்கள் உலருவதால் சரீரத்தில் மிக்க வெப்பம், தாகம், இவையுண்டாகின்றன. இத் தகனகாரித்தொழிலும் அதற்கு காரணமான வாயுவின் சஞ்சாரமும் சரீரம் முழுவதிலுமாவது அல்லது சில இடங்களிலாவது இருப்பதுண்டு. சரீரம் முழுவதும் இருக்கும்போது அது வெவ்வேறு விதமான காய்ச்சல் என்ற பெயரை வகிக்கின்றது.

அவ்விதமில்லாமல் சரீரத்தில் சரிபாதியில் அக்காரியம் நடைபெறும்பொழுது அர்த்தநாரீசுர ஜ்வரமென்று சொல்லுவார்கள். அப்படியின்றி சரீரத்தில் உள் உறுப்புகள் ஒவ்வொன்றில் அக்காரியம் நடைபெற்றால் இன்ப்ளமேஷன் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் வியாதி சம்பவிக்கின்றது. மனிதன் ஆரோக்யமாக விருக்கும் காலத்தில் உட்கொள்ளும் ஆகாரங்களால் தகனகாரித் தொழில் நடைபெற்று ஆரோக்யத்திற்கு உசிதமான உஷ்ணம் உண்டாகின்றது. ஆகாரம் உட்கொள்ளாவிடில் பிரதானமாக தாதுக்களையொட்டியே அத்தொழில் நடைபெறுகின்றது. அப்பொழுது சரீரம் இளைக்க ஆரம்பிக்கின்றது. சுவல்பநாள்களில் சரீரத்தில் குறிப்பான வித்தியாசம் காணப்படுகின்றது. சுவாசப்பை, தோல், மூத்திரக்குண்டிக்காய் இவைகளின் தொழிலும் தினமும் நடைபெறுவதால் சரீரம்மிகவும் மெலிவடைய ஆரம்பிக்கின்றது. சரீர சேஷ்டையும் அம்மெலிவுக்கு ஒத்தாசைசெய்கின்றது. சுவல்பநாள் கழிந்தபிறகு சரீரத்தில் உஷ்ணநிலைமை குறைகின்றது. பத்தாவது நாள் சரீரம் 100-ல் நாற்பது பங்கு கனத்தை யிழக்கின்றது. அப்பொழுது ஆரோக்யநிலைமையில் சரீரத்துக்கு வேண்டிய உஷ்ணத்தில் சுமார் மூன்றில் ஒருபாகம் குறைகின்றது. அந்நிலைமையில் நாசம் ஏற்படுகின்றது. ஆனால் சில சன்னிபாதக்காய்ச்சல்களில் நோயாளி 40-நாள் வரை பிரக்ஞையற்றும், ஆகாரமுட்கொள்ளாமலுமிருந்து பிறகு வியாதி விலகி ஜீவிப்பது அனுபவத்தில் கண்ட விஷயம். ஆங்கில வைத்தியர்களுக்கு இவ்வனுபவம் அபூர்வமாக நேர்ந்திருக்கலாம். பொதுவில் ஆங்கில வைத்தியர்கள் நோயாளிகளுக்கு மருந்துகொடுப்பதுபோலவே ஆகாரத்தையும் அடிக்கடி கொடுத்துவருவதால் காய்ச்சல்காரர்கள் ஆகாரமில்லாமல் அதிக நாள் ஜீவித்திருப்பது கண்டுபிடிக்கமுடியாது. ஆனால் மருந்துகூட உட்செல்லமுடியாதபடி பிரக்ஞையற்று வெகுநாள் ஆகாரமில்லாமலிருந்து பிறகு பிழைத்துக்கொண்டவர்களையும் அபூர்வமாகவாவது பார்த்திருக்கக்கூடும். அப்படி பிரக்ஞையற்று ஆகாரமுமில்லாமல் வெகு நாளிருக்கும் நோயாளிகளுக்கு காய்ச்சல் மாத்திரம் தணியாமல் உஷ்ணம் ஒரே நிலைமையிலாவது அல்லது அதிகமாகவாவது ஆவதும் அறிந்த விஷயமே. மிதமாக தகனத்தொழில் நடைபெறும் ஆரோக்யகாலத்தில் ஆகாரமுட்கொள்ளாவிடில் நிதானமான தாது க்ஷயமுண்டாகி சுமார் 10 அல்லது 12 நாட்களில் மனிதன் இறக்கநேரிடுகையில் ஆகாரமுமில்லாமல் சரீர முழுவதும் விசேஷதகனத்தொழில் நடைபெறும்பொழுது அந்நோயாளி அதிககாலம் எவ்விதமாக ஜீவித்திருக்கமுடியுமென்பது ஓர்பிரதான

கேள்வி. ஆங்கில வைத்தியர்கள் இதற்கு எவ்வித சமாதானமளிப்பார்களென்பது விளங்கவில்லை. ஆனால் விசேஷமாக தகனத்தொழில் நடைபெறினும் சரீரம் நாசமாகும்படி தாது க்ஷயம் உண்டாகவில்லையென்று ஒரு சமாதானம் கூறக்கூடும். அது யுக்திக்குப் பொருந்தாது. தாது க்ஷயத்தாலேயே தகனத்தொழில் நடைபெறுவதாக அவர்கள் சொல்லுவதால் தகனத்தொழில் அதிகம் ஆக ஆக தாது க்ஷயம் அதிகமாகுமென்றுதான் நம்பக்கூடும். தகனத்தொழிலுக்குத் தக்கபடி உஷ்ணம் அதிகமாகின்றது. ஆகையால் சரீரத்தில் காணப்படும் உஷ்ணத்தைக்கொண்டு அதற்கேற்ற தகனத்தொழிலையும், அதற்குத் தக்கபடி தாது க்ஷயத்தையும் ஊகித்துக்கொள்ளவேண்டியதே. ஆகையால் மின் சொல்லியது கேள்விக்குத் தகுந்த சமாதானமாகாது. ஆயுர்வேதத்தில் இதற்கு ஒருவாறு விடையளித்திருக்கின்றனர். சரீரத்திற்கு வெளியில் நடக்கும் விஷயங்களைக்கண்டு அவைகள் போலவே சரீரத்துக்குள்ளும் நடைபெறுமென முற்றிலும் நினைக்கக்கூடாது. சரீரத்திலுள்ள பித்தங்களெல்லாம் பித்தமென பொதுவில் அழைக்கப்படினும் அவைகளுக்கு குணத்தில் வேறுபாடு உண்டு. பித்தாசயத்திலிருக்கும் பித்தம் எல்லா பித்தங்களுக்கும் மூலகாரணமாகவிருந்தாலும் அதற்கு பாசனசக்திதான் விசேஷமாக உண்டென்றும் மற்ற தாது பித்தங்களுக்கு தானசக்தியுண்டென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. மனிதன் ஆரோக்யகாலத்தில் ஆகாரமுட்கொள்ளாவிடில் பித்தாசய பித்தம் கெடாமலிருப்பது காரணமாக தாது பித்தங்கள் வலுகுன்றாமல் தொழிலை நடத்துவதால் தாது க்ஷயம் ஏற்பட்டு கடைசியில் மரணமும் ஏற்படுகின்றது. இவ்விதம் தாது க்ஷயம் ஏற்படும் காலத்தில் உஷ்ணம் குறைவுபடுகின்றது. ஆனால் காய்ச்சலில் தாதுக்ஷயம் ஏற்படும்காலத்தில் உஷ்ணம் அதிகபடுகின்றது. ஆகையால் உஷ்ணம் அதிகப்படுவதற்கும் குறைவதற்கும் தாது க்ஷயத்தை காரணமாகச்சொல்லுதல் சரியல்ல. உஷ்ணத்தாலேயே தாது க்ஷயம் ஏற்படுவதாகச் சொல்லுதல் பொருந்தும். உஷ்ணம் அதிகமாவதற்குக் காரணம் பித்தமே. உஷ்ணகாரணங்களுக்குள் பிரதானம் பித்தமென்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றது. பித்தாசய பித்தம் கெட்டு ரக்தக்குழாய்களில் செல்லுவதால் இதன் சம்பந்தம் பெற்ற மற்ற தாது பித்தங்கள் இதனுடன் கலந்து உஷ்ணத்தை அதிகமாக்குகின்றன. இவ்விதம் பித்தாசய பித்தம் சேர்ந்ததால் தாதுபித்தங்கள் உண்மையில் அவைகள் சக்தியை யிழக்கின்றன. ஆகவே அவைகள் தொழிலும் தடைபடுகின்றது. இப்படித் தடைபடுவதாலேயே சன்னிபாதசுரங்களில் ஆகாரமின்றி

தீர்க்ககாலம் ஜீவிக்கமுடிகின்றது. "தோஷாணுமேவஸா சக்தி:" என்று இவ்வர்த்தத்தையை வாக்படர் கூறுகின்றனர். உட்கொண்ட ஆகாரம் பக்வமாக இன்றியமையாத திரவ பித்தங்கள் ஜ்வர வெக்கையால் சோஷிக்கப்படுகின்றதென்றும் ஆகையால் ஜ்வரங்களில் ஜீர்ண சக்தி குறைந்து விடுகிறதென்றும் எல்லாரும் ஒப்புக்கொண்டவிஷயம். மற்ற பித்தங்களும் பித்தாசய பித்தமும் "பித்தம் துஸ்வேத ரக்தயோ:" என்று சொல்லியவிதமாக ரக்தத்தையே ஆரோக்ய காலத்தில் பெரும்பாலும் சார்ந்திருப்பதால் வியாதிகாலத்தில் அவைகள் கெட்டு உணவை பக்குவமாக்க சக்தியற்றிருப்பதுபோலவே தாத்வக்நிகளும் கெட்டு தாதுக்களை சோஷணம் செய்ய சக்தியற்றிருப்பது சகஜமேயாகும். தக்ஷன் என்பவருடைய காலத்தில்தான் முதல் முதலில் காய்ச்சல் உலகினில்தோன்றி பிறகு எங்கும் பரவியதாக சுதேசநூல்கள் கூறுகின்றன. மற்ற வைதிக கதைகளை நம்பாவிடினும் இந்த வளவு ஒப்புக்கொள்ளுவதில் யாருக்கும் ஆக்ஷேபமிராது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வியாதி புதிதாகத் தோன்றுவதுபோல தக்ஷருடையகாலத்தில் காய்ச்சல் இந்தியாவில் பரவிற்று. இக்காய்ச்சலை நிஜக்காய்ச்சலென்றும், வெளிக்காய்ச்சலென்றும் இருவகையாக பிரிக்கலாம். மின்சொல்லியவிதமாக திரிதோஷங்களால் வருபவைகளுக்கு நிஜக்காய்ச்சலெனச் சொல்லலாம். வெளிக்காரணங்களால் வருபவைகளுக்கு வெளிக்காய்ச்சலெனப் பெயர். வெளிக்காரணங்களாவன, விஷக்காற்று, விஷத்தையுட்கொள்ளல், வெய்யிலிலலைதல், நெருப்பில் வசித்தல், மிகுதியாக பிரயாணம் செய்தல், அடிபடுதல் முதலியவைகள். மிககாமம், கோபம், இவைகளால் வரும் காய்ச்சலும் இந்த இனத்தைச்சேர்ந்ததே. உட்கொள்ளும் விருத்தமான உணவுகளால் சரீரத்தில் வாத பித்த சிலேஷ்மங்கள் நிலைமை மாறி உண்டாகும் வியாதிகளுக்கு நிஜவியாதியென்றும், பூச்சி, புழு, அலைச்சல் முதலிய வெளிக்காரணங்களால் சரீரத்தில் வாத பித்த சிலேஷ்மம் நிலைமைமாறி வரும்வியாதிகளுக்கு வெளி வியாதி யென்றும் பொதுவில் பெரும்பாலும் வியாதிகளை வகுக்கலாம். வெளிக்காய்ச்சல்களை கணக்கிட்டுச் சொல்லுவது சாத்தியமல்ல. நிஜக்காய்ச்சல் ஏழு வகையாகின்றன. வாதம், பித்தம், சிலேஷ்மம், வாத பித்தம், வாத சிலேஷ்மம், சிலேஷ்ம பித்தம், ஜன்னி என்று ஏழு வகைக்கும் பெயரிட்டிருக்கின்றனர். இதில் கடைசி ஜன்னி என்பதை சன்னிபாதமென வடமொழியில் கூறுவர். இதை பதினெண்வகையாகப் பிறித்திருக்கின்றனர். காய்ச்சலில் கீழ் சொன்ன பேதங்கள் ஆங்கில முறையில் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பெரும்

பாலும் காய்ச்சலெல்லாவற்றையும் ஒரேவிதமாக நினைத்து சிகிச்சையும் ஒரேவிதமாக செய்யப்படுகின்றது. ஆனால் சுதேச வைத்திய முறையில் இப்பிரிவுகள் சூக்ஷ்மமாக கவனிக்கப்பட்டு தக்கவிதம் சிகித்சையும் கையாளப்படுகின்றது. அவைகளைப் பிரித்து அறியமுடியாதவர்களுக்கு சுலபமாக கையாளும்படி சில வழிகளும் காட்டப்பட்டிருக்கின்றன. முதலாவது வாதசுரத்தின் லக்ஷணம்:-

தலை, கால், கை, முதலிய சரீரபாகங்களில் ஒரே காலத்தில் உஷ்ணம் வியாபிக்காமல் ஒவ்வொரு காலத்தில் உஷ்ணம் உண்டாகும். காய்ச்சல் வரும்போதும் இவ்விதமே வித்தியாசம் காணப்படும். ஒரு சமயத்தில் காரணமின்றி உஷ்ணம் தீவிரமாகவும், ஒருசமயத்தில் காரணமின்றி உஷ்ணம் மந்தமாகவுமிருக்கும். உடம்பில் எரிச்சலும் இவ்விதமே வித்தியாசப்படும். கீழேசொல்லப்படும் வேதனைகள் ஒரு சமயம் கடுமையாகவும் ஒரு சமயம் காரணமின்றி இலேசாகவுமிருக்கும். அவ்வேதனைகள் திடீரெனத்தோன்றும். திடீரெனமறையும். இரண்டு பாதங்களும் சுரணையற்றிருக்கும். இரண்டு பாதங்களும் துவளாமல் விரைப்பாயிருக்கும். முழங்கால் ஆடுசதை மேலிழுத்து கட்டினதுபோல் தோன்றும். சரீரத்தில் சிரமம் அதிகரிக்கும். ஸந்திபந்தங்கள் ஒடிந்து விழுந்தன போலத்தோன்றும். இரண்டு துடைகளும் வலிவு குன்றும். இடுப்பு வளையாமல் விரைப்பாயிருக்கும். முதுகில் அடித்ததுபோன்ற வலி தோன்றும். வயிற்றில் பிறண்டு மிதப்பதுபோன்ற வலியுண்டாகும். எலும்புகளில் அதிலும் விசேஷித்த இரண்டு அள்ளை எலும்புகளில் வெட்டுதல் போன்ற வலியுண்டாகும். ஹிருதயத்தில் இழுத்துப் பிடிப்பதுபோன்ற வலியுண்டாகும். மார்பில் சவுக்கால் அடிப்பதுபோன்ற வலியுண்டாகும். இரண்டு தோள்களிலும் தயிர்கடைவதுபோன்ற வலியுண்டாகும். கைகளில், வெடித்துப்போவதுபோன்ற வலிதோன்றும். ஆகாரத்தை மென்று தின்னுவதே கடைவாய்க்கு கஷ்டமாகவிருக்கும். அடிக்கடி கொட்டாவி அதிகரிக்கும். காதுகளில் சப்தமுண்டாகும். நெற்றிப்பொட்டுகளிரண்டிலும் கடும்வலியுண்டாகும். தலைமுழுதும் வலி தோன்றும். வாய் துவர்ப்பாகவிருக்கும். அல்லது ஒரு ருசியும் தெறியாதபடி வாய் விரசமாகவிருக்கும். மூத்திரம், மலம் இவைகள் சரியாக வெளியேறுமல் சற்று பந்தப்படும். தோல், முகம், கண், நகம், மூத்திரம், மலம் இவைகளில் மங்கலான சிகப்புநிறம் தோன்றும். ஒக்காளம், ஆகாரத்தில் வெறுப்பு, ஆகாரத்தில் பிரியமின்மை, ஜீர்ணசக்திகுறைவு, வியர்வையின்மை, தூக்கமின்மை,

வாய்வரட்சி, உதட்டுவெடிப்பு, தாகம், வரட்டு இருமல், வரட்டுவாந்தி மனவருத்தம், மயிர்க்கூச்சல், அங்கம், பல், இவைகளில் சிறுசிறுப்பு, நடுக்கம், தூக்கமின்மை, தலைசுற்றல், பிதற்றல்,— குளிர்காய விருப்பம் இவைகளே.

இரண்டாவது பித்தக்காய்ச்சலின் லக்ஷணம் :—

ஒரே காலத்தில் சரீரம் முழுவதும் வியாபித்தல், அதிகப் பிதற்றல், வாய் கசப்பு, மூச்சுகாற்று அதிக உஷ்ணமாக வீசுவதால் மூக்கிலும் உதடுகளிலும் வேக்காடு, குளிர்ச்சியில் விருப்பம், அதிக தலைசுற்றல், மூர்ச்சை, மயக்கம், எதிலும் பிரியமின்மை, மலம் இளகிப்போதல், பித்தஜல வாந்தி, ரக்தம் உமிழ்தல், புளியேப்பம், சரீரத்தில் தட்டையானசிலபுள்ளிகள் காணுதல், தோல், முகம், கண், நகம், மூத்திரம், மலம் இவைகள் மஞ்சள் நிறமாயிருத்தல், வியர்வையுண்டாதல், மூச்சுகாற்று நாற்றம் வீசுதல், அதிதாகம் இவைகளே.

மூன்றாவது கபசுரத்தின் லக்ஷணம் :—

மிகவும் அன்னதுவேஷம், அதிகசோம்பல், உஷ்ணம் குறைந்திருத்தல், கபம் உமிழ்தல், வாய்தித்திப்பு, பீனிசம், அதிக மூச்சு, ஓக்காளம், வாந்தி, இருமல், தோல், கண், நகம், மலம், மூத்திரம் இவைகள் வெளுத்திருத்தல், சரீரத்தில் சிறியதடிப்புகள், இவைகளே.

நான்காவது வாதபித்த சுரத்தின் லக்ஷணம் :—

மின் சொல்லியபடி வாதசுரம், பித்தசுரம், இவைகளின் லக்ஷணங்கள் கலந்திருத்தலும், இன்னும் தலைவலி, தூக்கமின்மை இவைகளே :—

ஐந்தாவது வாத சிலேஷ்மசுர லக்ஷணம் :—

மின் சொல்லியபடி வாதசுர லக்ஷணங்களும், சிலேஷ்ம சுர லக்ஷணங்களும் கலந்திருப்பதும், இன்னும்சரீரம் கனுக்கனுவாக வலியும், தலைவலியும், குளிரும், கண் மறைவும், இவைகளே.

ஆறாவது பித்தசிலேஷ்ம சுரத்தின் லக்ஷணமாவது :—

மின்சொல்லியபடி பித்த சுர லக்ஷணங்களும், சிலேஷ்மசுர லக்ஷணங்களும் கலந்திருப்பதும், குளிர் உடம்பு வளையாமை, வியர்வை, உடம்பு எரிச்சல், கண் எரிச்சல் இவைகள் அடிக்கடி மாறுவதும், கபம்கலந்த பித்தஜலம் வெளியேறுவதும், நாக்கு வழ வழப்பும், ஆகிய இவைகளே :—

ஏழாவது சன்னியின் லக்ஷணங்கள் :—

வாதம், பித்தம், சிலேஷ்மம், இந்த சுரங்களில் சொல்லிய லக்ஷணங்கள் கலந்திருப்பதும், அடிக்கடி சரீரம் உஷ்ணம் வீசுவதும், அடிக்கடி சரீரம் குளிர்ந்துபோவதும், பகலில் அதிக தூக்கமும், ராத்திரி விழிப்பும், அல்லது ராத்திரி, பகல் முழுவதும் தூக்கமும், அல்லது இரண்டுவேளையும் விழிப்பும், மட்டில்லா வியர்வையும் அல்லது வியர்வையின்மையும், பாட்டு, ஆட்டம், விளையாட்டு முதலிய விபரீத செயல்களும், கண்கள் சிவந்து கலங்கி குறுகி மடிந்த இமைகளுடன் இருப்பதும், முழங்கால் சதை, அள்ளைகள், தலை கணுக்கள் இவைகளில் வலியும், காதுகளில் சப்தமும், வலியும், தொண்டையில் முள் அப்பினதுபோன்ற வேதனையும், நாக்கு வெந்து சுரசுரப்பாயிருப்பதும், ஸந்திபந்தங்கள் துவண்டுபோவதும், பித்தம், ரக்தம், கபம்இவைகள்கலந்து உமிழ்தலும், தலையை அடிக்கடி படுக்கையில் புரட்டுவதும், மங்கல், சிவப்பான தடிப்புகள் சரீரத்தில் தோன்றுவதும், ஹிருதயத்தில் வலியும், மலம் வெளியேறுமலிருப்பதும் அல்லது அவைகள் மிகவும் குறைந்தாவது அல்லது அதிகமாகவாவது வெளியேறுவதும், முகம் பளபளப்பாக விருப்பதும், பலம் குன்றுவதும், தொனி மந்தப்படுவதும், தொண்டையில் ஓர் வித சப்தம் உண்டாவதும் ஆகிய இவைகளே.

சன்னியில் பதினெட்டு விதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளின் விஸ்தாரம் அதிக அவசியமில்லாததுபற்றி விவரிக்கப்படவில்லை. சிகித்சையில் மிகவும் வேறுபாடுகளைக்கொண்டே வியாதிகளை இவ்விதம் வகுத்திருக்கின்றனர். நிஜஜ்வரம், வெளிசுரம் சேர்ந்து மொத்தம் எண்வகையில் சிகித்சையிலும் பத்தியத்திலும் ஒன்றுக்கொன்று மிகுந்த வித்தியாசப்படுகின்றது. ரசம், கந்தகம், பாஷாணம், உலோகம் முதலியவைகளால் செய்யும் சிகித்சைக்கு ரசசிகித்சை எனப்பெயர். இந்த எண்வகை காய்ச்சல்களில் ரசசிகித்சை பெரும்பாலும் வித்தியாசப்படாவிடினும் மூலிகை சிகித்சையிலும் பத்திய விஷயங்களிலும் மிகுந்தபேதம் காண்கின்றது. ஆகையால் நிதான பாகத்தில் சிகித்சையின்பேதங்களை யனுசரித்து, ரோகங்களைப் பலவகுப்புகளாகப் பிரித்திருக்கின்றனர். கீழே சொன்ன பதினெண்வகை சன்னிபாதங்களில் பொதுவாகக் காணும் குறிகளாவன:— கண் கோவைப்பழம்போல சிவந்திருத்தல், உதடு நாக்கு எகிர் இவைகள் கருத்திருத்தல், நாக்கு முள்ளாகயிருத்தல், புலப்பம் இவைகளே.

மேற்சொன்ன 18-வகை சன்னிபாதத்தில் மரணக்குறிகளாவன:— அபானவாயுவு வெளியோராமலும், பித்தம் கபம் இவைகள் வெளிப்படாமலும், மலமும் மூத்திரமும் அடைபட்டு ஜீர்ணசக்தி மிகவும் மெலிவடைந்து மேற்சொன்ன சன்னிகுறிகள் முழுவதும் பூர்ணமாக காணப்படில் அது அசாத்தியமெனக்கொள்ள வேண்டும்.

சன்னிபாதசுரங்களில் சிலவற்றில் முதலில் சரீரத்திற்கு வெளியில் மிகுந்த எரிச்சலும், பிறகு வயிற்றில் சகிக்கவொண்ணாத எரிச்சலும் உண்டாகும். சிலவற்றில் முதலில் வயிற்றில் மிகுந்த வெப்பமும், பிறகே சரீரவெப்பமும் ஏற்படும். இதற்கு தாகாதி சன்னிபாதமெனப் பெயர். இச்சன்னிபாதத்தில் கடைசியில் தாபம் குறைந்து சீதம் மேலிட்டு மயக்கம், வாந்தி, காரியுமிழ்தல், முதலியன உண்டாகும்.

சன்னிபாதசுரங்களில் சிலவற்றில் சரீரத்திலாவது வயிற்றிலாவது முதலில் அதிக சைத்தியம் காணும். பிறகு அந்த சீதம் தணிந்து மயக்கம், எரிச்சல், புளித்த ஏப்பம் இவைகள் காணும். இதற்கு சீதாதி சன்னிபாதமெனப்பெயர்.

இவ்விரண்டில் தாகாதி சன்னிபாதம் மிகவும் அசாத்தியம். முற்கூறியவண்ணம் சுரங்களில் எட்டாவதாகிய வெளிசுரம் பலவகைப்படும். அடி, வெட்டு, நெருப்பு முதலியவைகளாலும், அதிகபயம், காமம், சோகம், விஷம், மூலிகை, சில விருக்ஷங்களின் புஷ்பம் முதலியவைகளாலும் உண்டாகும். வெளிசுரத்திற்கு ஆகந்துசுரமெனப் பெயர்.

இச்சுரங்கள் சில முதலில் சரீரத்தில் பீடையுண்டாக்கி பிறகே மனதைப் பிடிக்கின்றன. அவற்றிற்கு சாரீர சுரமெனப் பெயர். சில மனதை முதலில் பிடித்து பிறகு சரீரத்தை தொந்திரவு செய்கின்றன. அவைகளுக்கு மானசசுரமெனப்பெயர். சிலவற்றில் சரீரத்தில் முதலில் குளிர் உண்டாகி பிறகே தாபம் உண்டாகின்றது. அவற்றிற்கு சௌம்யசுரமெனப் பெயர். சிலவற்றில் குளிர் உண்டாகாமல் ஆரம்பத்திலிருந்தே வெப்பம் உண்டாகின்றது. அவற்றிற்கு தீக்ஷ்ண சுரமெனப்பெயர். சிலவற்றில் குளிரும் தாபமும் கலந்து அடிக்கடி சுரம்வருவதும் விடுவதுமாக விருக்கும். அவற்றிற்கு மிசிர சுரமெனப்பெயர். சிலவற்றில் சரீரத்தின்மேல் உஷ்ணம் தணிந்தும், உள்தாபம் அதிகமாகவும் இருக்

கும். இதற்கு அந்தர் சுரமெனப் பெயர். இதில் சரீரத்தினுள் கடும்தாபமும் மலபந்தமும் உண்டாகும். சிலவற்றில் வெளிதாபம் அதிகமாகவும், உள்தாபம் தணிந்துமிருக்கும். இதற்கு பகிர் சுரமெனப்பெயர். இது சுலபசாத்தியம். ஆவணி, புரட்டாசி மாதங்களில் வரும் வாதசுரமும், ஐப்பிசி கார்த்திகை மாதங்களில்வரும் பித்தசுரமும், சித்திரை வைகாசி மாதங்களில் வரும் கபசுரமும் காலசுரமெனப்பெயர். அதாவது மேற்சொன்ன மாதங்களில் காலத்திற்கேற்றவாறு சுரமுண்டாவதால் அது காலசுரமெனக்கூறப்படும் மற்றவை அகால சுரம். அதாவது அந்தந்த காலத்திற்கேற்றபடியிராமல் மாறியிருக்கின் அது அகாலசுரமெனக்கூறப்படும். ஆவணி/ புரட்டாசி மாதங்களில் வாதசுரம் உண்டாகும் விதம் — மேற்சொன்ன மழைகாலங்களில் கால சுபாவத்தால் (விவரம் திரிதோஷ விமர்சத்தில் காணலாம்) வாதம் பிரகோபம் அடைகின்றது. அதாவது அதன் கதிமாறி விபரீதகதி அடைகின்றது. பித்தம் சிலேஷ்மம் அதற்கு சகாயமாக விருந்து காய்ச்சலை உண்டுபண்ணுகின்றது.

ஐப்பிசி கார்த்திகை மாதங்களில் பித்த சுரம் உண்டாகும் விதம் :— மழைகாலத்தில் மிகவும் விருத்தியடைந்த பித்தம் பிரகோபம் அடைகின்றது. அதற்கு கபம் சகாயமாகின்றது.

ஆவணி, புரட்டாசி, ஐப்பிசி, கார்த்திகை, மாதங்களில் காலத்திற்கேற்றவாறு உண்டாகும் இவ்விரண்டு கால சுரங்களில் காய்ச்சல்காரர்களுக்கு லங்கனம் செய்வதால் கெடுதி ஒன்றும் வாராது. மற்ற காலங்களிலும் பொதுவில் எல்லா சுரங்களுக்கும் ஆதியில் உபவாசம் செய்வது முக்கியமே. ஆனால் வியாதியின் நிலைமை, நோயாளியின் சரீர நிலைமை இவைகளை யனுசரித்து உபவாசம் செய்யவேண்டும். ஆனால் முன்சொல்லிய காலசுரங்களில் சற்று அதிகமாக உபவாசமிருந்தாலும் அக்கால சுபாவத்தால் பாதகம் விளையாது.

சித்திரை வைகாசி மாதங்களில் கபசுரம் உண்டாகும் விதம் :— பனிகாலத்தில் விருத்தியடைந்த கபம் ஷை மாதங்களில் பிரகோபத்தையடைகின்றது. வாதம் பித்தம் இவையிரண்டும் சகாயமாகி காய்ச்சல் உண்டாகின்றது.

முன்சொன்ன எண்வகை காய்ச்சல்களின் நிலைமை மூன்று விதங்களாகின்றன. ஆதி நிலைமை அல்லது ஆமநிலைமை, நடுநிலை

மை அல்லது பச்யமான நிலைமை, கடைசி நிலைமை அல்லது பக்வ நிலைமை என மூன்று நிலைமைகளுக்கும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆதி நிலைமை அல்லது ஆமநிலைமையாவது — காய்ச்சல்களின் ஆரம்பநிலைமை. அந்நிலைமை காய்ச்சல் ஆரம்பித்த தினத்திலிருந்து நடு நிலைமை காணப்படும்வரையில் தொடர்ந்திருக்கும். இந்நிலைமையை குறிகளைக்கொண்டுதான் நிர்ணயிக்கவேண்டும். காய்ச்சலின் வேகத்திற்கு தக்கவிதமாக இந்நிலைமை நீடித்திருக்கும். சில சுரங்களில் ஒரு நாள் இருப்பது முண்டு. சிலவற்றில் வெகுநாள் நீடித்திருப்பதுமுண்டு. ஆகையால் இவ்வளவுநாள்தானென்று கணக்கிட்டு நிர்ணயிக்கமுடியாது. இக்காலத்தில் சுரத்திற்கு செய்யும் சிகித்சைவேறு. இந்நிலைமைகளை நன்கு கவனித்தே வைத்தியன் ஔஷதம் செய்யவேண்டும். நிலைமை தெறியாது கொடுக்கும் ஔஷதத்தால் பலனில்லாமற் போகின்றது. எல்லாவியாதிகளிலும் இந் நிலைமைகளை கவனிக்கவேண்டியது அவசியமே. ஆகிலும் காய்ச்சல்களில் இந்நிலைமையை கவனிக்கவேண்டியது மிக முக்கியம். நிலைமையுணராது மருந்துகொடுப்பதால் மருந்து உடம்பில் பற்றுமல் போகின்றது. காய்ச்சலும் அதிககாலம் நீடிக்கின்றது. இந்நிலைமையே வைத்தியர்களை ஏமாற்றி அவர்களின் கியாதியையும் பங்கப்படுத்துகின்றது. நிலைமையுணராது 20 நாளாக ஒரு காய்ச்சலுக்கு ஒருவர் மருந்துகொடுத்து குணம் காணுத நோயாளி வெறுத்து அந்த வைத்தியனை அனுப்பிவிட்டு பிறகு வேறு வைத்தியனிடம் மருந்து பெற்றுக்கொள்ளுவதும் 2-வேளைகளில் குணமாகி அந்த வைத்தியனுக்கு நல்ல கியாதி கிடைப்பதும் பலர் அறிந்த விஷயமே. உண்மையில் இவ்விரண்டு வைத்தியர்களும் கொடுத்த மருந்து ஒன்றே. ஒருவர் 20 நாளாக மருந்துகொடுத்தும் வியாதி தணிவ்தில்லை. மற்றவர் அதே மருந்தை 2 வேளை கொடுத்தவுடன் வியாதி தணிகின்றது. இதற்கு காரணமென்ன? ஹஸ்தராசியென்று சிலர் சொல்லுவர். ஹஸ்தராசியை மறக்காவிட்டாலும் காய்ச்சல் தணிந்ததற்கு காரணம் அதன்நிலைமையே. காய்ச்சல் ஆமாவஸ்தையிலிருக்கும்பொழுது அந்நிலைமையை கவனிக்காமல் கொடுத்த ஔஷதங்களால் வியாதி பெருகிற்று. காலசுபாவத்தால் அவ்வியாதி திடீரென அந்நிலைமை மாறி பக்வாவஸ்தைக்கு வரும்பொழுது அதே ஔஷதம் கொடுத்தவுடன் வியாதி தணிந்து விடுகின்றது. ஆகையால் காய்ச்சல்களில் விசேஷமாக இந்நிலைமைகளை கவனிக்கவேண்டியது வைத்தியனின் கடமை.

ஆமநிலைமையின் குறிகளாவன — சுரத்தோடு ஒட்டிவரும் தலைவலி, உடம்புவலி, முதலிய உபத்திரவங்கள் கடுமையாகவிருப்பதும், உடம்பு வாடாமலிருப்பதும், மூத்திரம் அதிகமாக இறங்குவதும், மலம் சரியாக வெளியேறுமலிருப்பதும், மலம் ஜீர்ணமாகாமலிருப்பதும், பசியின்மையும் ஆகிய இவைகளே.

நடுநிலைமை அல்லது பச்யமான நிலைமை குறிகளாவன:— சுரம் வேகமாக அடித்தல், தாகம் அதிகரித்தல், பிதற்றல் அதிகமாதல், சுவாசம் அதிகரித்தல், தலைசுற்றல், மலம் வெளியேறுதல், வாந்தியெடுத்தல் ஆகிய இவைகளே.

கடைசிநிலைமை அல்லது நிராமநிலைமை குறிகளாவன:— சுரத்துடன் கூடவரும் தலைவலி முதலியன குறைதல், சுரவேகம் தணிதல், உடம்புவாடுதல், மூத்திரம் உசிதமாக இறங்குதல், மலம் ஜீரணமாகி கழிதல், தாகம் குறைதல், பசியெடுத்தல், புலப்பம் முதலியவை குறைதல், வாந்திமுதலியவை நின்றுவிடுதல் ஆகிய இவைகளே. அனேகமாக சுரங்களில் இம்மூன்றுவது நிலைமை சுரம் ஆரம்பித்த தினத்திலிருந்து ஏழுநாள்களுக்கு பிறகே ஏற்படுகின்றது. ஆனால் இந்நாள் கணக்கை எல்லா சுரங்களிலும் வைத்துக்கொள்ளக்கூடாது. சில சன்னிபாத சுரங்களில் 40 நாள் வரைகூட ஆமநிலைமை தொடர்ந்திருப்பதுமுண்டு. ஆகையால் முன் சொன்ன குறிகளைக்கொண்டு நிர்ணயம் செய்யவேண்டியது.

குணமாகும் சுரங்களின் லக்ஷணம் :— சுரத்துடன் கூடவரும் காசம் முதலியவை இல்லாமலும், நோயாளிகள் நல்ல வயதும் பலமு முள்ளவர்களாயிருந்தும், பலமான சுரகாரணங்களில்லாமலும், வரும் சுரங்கள் சுகமாக குணமாகக்கூடியவை.

குணமாகாத சுரங்களின் குறிகள் :— திடீரென தோன்றி சரியான சிகித்சையில்லாமலே திடீரென வியாதிகுணப்படின் அது குணமாகாதென்றே கொள்ளவேண்டும். பலமான சுரகாரணங்களால் மிகுந்த வேகத்துடன் வீசும் சுரம் குணமாகாது. சரீரத்தில் எல்லா தாதுக்களையும்பற்றி தாதுக்களை சோஷிக்கச் செய்தாலும் அவ்விதமே. மாதக்கணக்காக வீசும் காய்ச்சலும் அவ்விதமே. அதிக பிதற்றல், தலை சுற்றல், அதிக மூச்சுகளுடன் இருக்கும் காய்ச்சலும் அசாத்தியமே. மெலிந்த உடம்பில் வீசும் காய்ச்சலும் அவ்விதமே. கை, கால், உடம்பு முதலியது வீங்கி காணும் சுரமும் அசாத்தியம். கொஞ்சமும் அக்நி பலமில்லாமலிருந்தாலும் அசாத்தியம். வெகுநாள் காய்ச்சல் அடித்தும் உடம்பு வாட்டம்

கொடுக்காமல் கனத்திருப்பினும் அசாத்தியம். வார்த்தை பேசும்போது நடுவில் தயங்கி நிறுத்திவிடுவதும் அசாத்தியகுறி. கண்கள் கோவைப்பழம்போல சிவப்பதும், ஹிருதயத்தில் மிகுந்த வலி தோன்றுவதும் அவ்விதமே. கபம் விழாத வரட்டு இருமல் காலையிலாவது அல்லது சாயங்காலத்திலாவது உண்டானால் அதுவும் அவ்விதமே. சரீரத்தில் பலமும் மாம்சமும் குறைந்து கபம் விழும் காசமும் இருப்பின் அதுவும் அப்படியே. காய்ச்சல் வந்த சமயத்தில் கண், காது முதலிய இந்திரியம் ஏதாகிலும் அதன் யோக்கியதையை இழந்தால் அதுவும் அசாத்தியமே.

அர்த்தசுரம் :— இது ஓர் அபூர்வமானசுரம். கை, கால்கள் ஜில்லிட்டும், முகமும் உடம்பும் அதிக உஷ்ணமாக விருக்கும். அல்லது பார்சுவ வாயுபோல தலையிலிருந்து கால்வரையில் சரீரத்தில் சரிபாதியில் ஓர்பாகம் அதிக உஷ்ணமாகவும், மற்றொருபாகம் சீதமாகவும் இருக்கும். இதற்கு அர்த்தநாரீசுவர சுரமெனப்பெயர்.

காங்கை :— இது பல வியாதிகளுடன் சேர்ந்தும் தனியாகவும் வருவதுண்டு.

அதன் லக்ஷணம் :— கை, கால் பலக்குறைவு, பசியின்மை, அரோசகம், கண்ணெரிதல், உடம்பில் அல்பமாக உஷ்ணம் தட்டுப்படுதல், உள்ளங்கை, கால்களில் எரிச்சல், தாகம், ஆகிய இவைகளே. இதற்கு அந்தி காங்கையெனவும் பெயர்.

அபூர்வசுரம் :— இதைப்பற்றி சாஸ்திரங்களில் விவரிக்கப்படவில்லை. பிரதி தினமும் சாயங்காலம் 4-மணிக்கு காய்ச்சல் வரும். ஆனால் 100 அல்லது 101 டிக்கிரிக்குள் இருக்கும். தலைவலி முதலியன ஒன்றும் இராது. நோயாளியும் பலக்குறைவின்றியும் ஆகாரக் குறைவின்றியும் நடமாடிக்கொண்டிருக்கக்கூடும். தூக்கமும் சரியாகவிருக்கும். உள் உறுப்புகள் ஒன்றும் பாதிக்கப்படுவதில்லை. காலையில் சுரம் தணிந்துவிடும். இவ்விதம் 40 நாள் வரை ஒரே மாதிரியாகவிருந்து சுபாவத்தால் தணிந்துவிடும். ஆங்கில வைத்தியர்களும் இதன் காரணமறியாது திகைக்கின்றனர்.

சிறு காங்கை :— விசேஷமாக சுவாசகாசம் முதலிய நீடித்த வியாதியுள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வரும். சாயங்காலத்தில் 4-மணிசுமாருக்கு ஆரம்பமாகி 99 அல்லது $99\frac{1}{2}$ டிக்கிரி வரையில் உயரும். நோயாளி வியாதிவந்ததாகவே உணருவது அரிது. ஒரு தொந்திரவும் இராது. சிலநாள் வராமலிருந்து

பிறகு தொடரும். சில சமயங்களில் தொடர்ந்தும் வரும். சிகித்சையில்லாமலே நின்றுவிடும். திடீரென ஆரம்பமாகும். மாதக் கணக்கில் காரணமின்றி வராமலுமிருக்கும்.

சுர குறிப்புகள் :— கைதேர்ந்த வைத்தியனுக்கும் சுரத்தின் நிதானத்தை அறிந்துகொள்வது கடினமாகின்றது. க்ஷயம், கிராஹணீ, பாண்டு, ப்ளேக் என்ற அக்கிரோகிணி, அம்மை, புண்கள், வாத வியாதிகள் முதலிய பல வியாதிகளில் காய்ச்சல் பலமாகவும், தணிந்தும் வருவதுண்டு. (அக்காய்ச்சல்களின் சுபாவங்களை அந்தந்த வியாதி வகுப்பில் பார்த்துக்கொள்ளவும்.) பலமான தலைவலியிலும் காய்ச்சல் கூடவருவதுண்டு. காய்ச்சல் கூட வந்தால் எந்த வியாதியும் கஷ்டசாத்தியமாகின்றது. காய்ச்சல் கலக்காமல் வரும் வியாதிகள் அநேகமாக சுலபமாகவும் இருக்கின்றது. சில காய்ச்சல் விடும் காலத்தில் மிகுந்த வியர்வையை யுண்டுபண்ணும். அதைப் பார்க்கும் பொழுது வைத்தியனும் தடுமாறுவதுண்டு. சீதாஸ்பதங்களில் உண்டாகும் வியர்வை போலவே காணப்படும். அச்சமயங்களில் நோயாளி மூர்ச்சிப்பதுமுண்டு. தன்னையறியாமல் மூத்திரமும் மலமும் வெளிப்படும். இவை சன்னிபாதங்களிலும் லக்ஷணமாகவிருப்பதால் எல்லாரும் திகைப்பது சகஜமே. ஆனால் இவ்வியர்வை முதலியவை சன்னிபாதத்தில் நீடித்திருக்கும். மற்றவைகளில் நீடித்திராது. ஒன்று அல்லது இரண்டு மணிக்குள் பழைய ஸ்திதி வந்துவிடும். சில சுரங்களில் இந்த லக்ஷணம் கண்டபிறகு சுரம் நின்றுபோவதுண்டு. மற்றவைகளில் தணிந்து பிறகு குறைந்தவேகத்துடனிருக்கும். பொதுவில் இந்தலக்ஷணம் தோன்றியபிறகு வியாதி சீக்கிரத்தில் குணமாகுமென்று நம்பலாம். அக்காலங்களில் வியர்வையைத்துடைத்தும் பிறகு இதன் சிகித்சையில் சொல்லும் உபசாரங்களையும் செய்ய வேண்டும். சிலருக்கு காய்ச்சல் விடுங்காலத்தில் சரீர உஷ்ணம் இயற்கைக்கு குறைந்து போவதுமுண்டு. 96-டிக்கிரிவரையில்கூட குறைந்திருப்பதுண்டு. ஆனால் இது அபூர்வ சம்பாவிதம். 98 அல்லது $97\frac{1}{2}$-வரையில் குறைவது அதிகமாகக்காணக்கூடும். வியாதி விடுங்காலங்களில் இவ்விதம் குறைந்தே பிறகு தந்நிலையில் உஷ்ணமிருப்பது நல்ல குறியாகும். அவ்விதமின்றி சரியாக $98\frac{1}{2}$ டிக்கிரியில் வந்து நின்றால் திரும்பி காய்ச்சல் வந்து விடுகின்றது. அவ்விதின்றி 98 அல்லது 99 என்ற அளவில் இருந்தால் காய்ச்சல் நின்றுவிடும் என்று நினைக்கலாம். காய்ச்சலில் கிரமமாக உஷ்ணம் குறைந்து $98\frac{1}{2}$-டிக்கிரியில் நின்றால் பிறகு சுரம் வருவதில்லை. சீதள

ஸ்பதத்திலும் இயற்கை உஷ்ணம் குறைவுபடுகின்றது. சில சுரம்
விடுங்காலத்திலும் ஷெடி குறைவு ஏற்படுகின்றது. ஆகையால் இவ
ற்றின் வித்தியாசத்தையும் நிதானித்து தெறிந்துகொள்ளவேண்
டும். "தோஷாணுமபி பாகுல்யாத் ரிஷ்டா பாஸ: ஸமுத்பவேத்"
என்றபடி சில காய்ச்சல்களில் சன்னிபாத ஸம்பந்தமில்லாவிட்டா
லும் சன்னிபாத சேஷ்டை யுண்டாகும். அதாவது சன்னிபாதத்
தைபோல பல், நாக்கு, உதடு, எகிர் இவைகள் கருப்பாகவிருக்கும்.
சிலருக்கு புலப்பம் அதிகமாக விருக்கும். சிலருக்கு கண்கள் சிவ
ந்திருக்கும். இப்பேர்ப்பட்ட லக்ஷணங்களைக்கொண்டு சன்னி
யென்று மயங்கக்கூடும். சிலசமயங்களில் சுவாசம்கண்டதுபோல
த்தோன்றும். இப்படி பொதுவான லக்ஷணங்களில் எதைக்கொ
ண்டு நிர்ணயிப்பது! நாடி ஒன்றுதான் இச்சந்தர்ப்பங்களில் ஏற்ற
சாதனம். நாடி நிர்ணயம் அறிந்தவன்தான் நிலைமையை சமாளிக்க
முடியும். பலகாய்ச்சல்களில் பார்வைக்கு சுரம் இருப்பதாகத்
தெறியாது. தெர்மாமீட்டரைக்கொண்டு சோதித்தாலும் உஷ்ண
நிலை இயற்கையை ஒத்திருக்கும். "ஜ்வரஸ்ஸூக்ஷ்ம: ரசாதிஷ்
வேவலீயதே" என்று சாஸ்திரங்கள் கூறுவதுபோல சுரம் சூக்ஷ்ம
மாகவிருக்கும். தாகம் முதலிய சில அடையாளங்களைக்கொண்
டும், நாடியைக் கொண்டும் அப்பொழுது நிதானிப்பது அவசியமா
கின்றது. அந்நிலைமை சிலநாட்கள்கூட நீடித்திருப்பதுமுண்டு.
அச்சமயங்களில் அபத்தியம்செய்தால் விபரீதமாக காய்ச்சல் திரு
ம்பி வந்துவிடும். வியாதியில்லையென்றும் சௌக்கியமாகிவிட்டதா
கவும் நோயாளி வாதித்தாலும் வைத்தியன் மயங்காமல் சிகித்சை
செய்யவேண்டியது அவசியம். "தர்சனஸ் பர்சன ப்ரச்நை:"
என்று நோயாளியைக்கேட்டு சில விபரங்கள் தெறிந்துகொள்ளும்
படி சாஸ்திரம் விதித்தாலும் வைத்தியன் தன் புத்தியால் ஊகிக்க
வேண்டியவற்றை நோயாளியைக்கேட்டு நம்பலாகாது. சில காங்
கைகளில் உடம்புவாடாமலும் அதிக பலஹானி ஏற்படாமலுமிரு
ந்து நாக்கில் சிறிய புண்கள் வெடிக்கும். இந்நிலைமை 3 மாதங்
களுக்கு அதிகமாக நீடித்திருப்பதுமுண்டு. இவ்வகை கடைசியில்
மரணத்தைக்கொடுக்கின்றது. சில சமயங்களில் லேசான முறைக்
காய்ச்சல்களில் கூட மரணம் ஏற்படுகின்றது. 4, 5 முறை காய்ச்
சல் லேசாக வந்து பிந்தி திடீரென சுவாசம் கண்டு மரணம் நேரு
கின்றது. சில தினக்காய்ச்சல்களில் உஷ்ணம் இயற்கைக்கு சற்று
அதிகமாக அதாவது 100 அல்லது 101 டிக்கிரி வரையில் வீசி உள்
உறுப்புகள் ஒன்றும்கெடாமலிருக்கும்பொழுதே வைத்யனும் திடுக்
கிடும்படி திடீரெனசுவாசம்கண்டு உடனே அபாயம்நேரிடுகின்றது.

"வைத்திய சந்திரிகா."

ஆயுர்வேத சாஸ்திரத்தின் உண்மைப் பெருமையையும், அதன் ஆராய்ச்சியினால் மனிதசமூகத்திற்கு எற்படக்கூடிய பிரயோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே நமது மாஸிகை வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ண பாண்டித்தியம் வாய்ந்த எமது ஆசிரியரும், மற்றும் பழைய முறையில் பயிற்சியுடையவர்களும் எழுதிவரும் விஷயங்கள் பண்டிதருக்கும், பாமரருக்கும் நல் விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்களின் மொழிப் பெயர்ப்பு நல்ல நடையில் வெளிவரும். வியாதிகளின் காரணம், குணம், சிகிச்சை முதலியவைகளை மூடுமந்திரமில்லாமல் "வைத்திய சந்திரிகா" பிரதி மாதமும் தாங்கி வருவாள். வைத்திய முறைகளில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்க்கு ஒரு வைத்திய கலாசாலையைப்போல் நமது "சந்திரிகா" உதவுவாள்.

ஒரு காலத்தில் தனக்கு ஒப்பும், உயர்வும் இல்லாமலிருந்த நம் நாட்டு சிகிச்சா முறைகளின் பிரயோஜனத்தை எடுத்துக் காட்ட வெளிவரும் நமது பத்திரிகை தமிழ் மக்களின் முழு அனுதாபத்தையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறாள்.

வியாபாரிகளே! என் நல்ல சரக்கை வைத்துக்கொண்டு தூங்குகிறீர்கள். கடையில் சாமான்களை வைத்திருந்தால் வியாபாரம் விர்த்தியடையாது. உங்களிடம் உயர்ந்த சரக்கு இருப்பதை யார் அறிவார்கள்? தமிழ் நாடு முழுமையும் இன்னும் தமிழன் வசிக்கும் எல்லா இடங்களுக்கும் செல்லும் "வைத்திய சந்திரிகா" வில் ஓர் முறை விளம்பரம் செய்துபாருங்கள். மேல் நாட்டாரின் வியாபார முன்னேற்றத்தின் இரகசியம், அவர்கள் செய்யும் "விளம்பர" மென்பது நம்மவரில் பலருக்கு இன்னும் தெரியாது.

வைத்தியர்களே! உங்கள்மருந்துகள் எராளமாய் விற்பனையாகவேண்டுமா? திறமையும், புகழும் நாளுக்குநாள் வளரவேண்டுமா? வைத்திய உலகத்தில் தனக்கு நிகரில்லாத தமிழ் மாஸிகையான இந்த பத்திரிகை மூலை, முடுக்குகளிலிருக்கும் ஆயுர்வேத, யூனானி, சித்த வைத்தியசாலைகளையும், வைத்தியர்களின், கைகளையும் அலங்கரிக்கிறது. ஆகையால் ஒரு முறையாவது எங்கள் சஞ்சிகையில் விளம்பரம்செய்துபாருங்கள்.

காரியஸ்தர்,
"வைத்திய சந்திரிகா" கரூர்.

சந்தா விகிதம்.	விளம்பர விகிதம்.
வருஷ சந்தா :—	மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ. 8.
உள் நாட்டுக்கு ரூ. 2.	,, ,, ½-க்கு ரூ. 4.
வெளிநாட்டுக்கு ரூ. 3.	,, ,, ¼-க்கு ரூ 2.